Registered No. M. 878.

6-MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization.

தொகுதி 7 } 1917-௵ மார்ச்சு ௴ நள ௵ பங்குனி ௴ { பகுதி 11

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்.

(CONTENTS)

		பக்கம்
1.	தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி.ஏ. Current events—R. Rangaswamy Iyer. B. A.	403
2.	மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.	411
3.	பெணகல்வி—தி. யம். முகையதீன் கவிராயர் Female Education——T. M. Mohideen Kavirayar	420
4.	பிரஹ்மக்ஞான தரிசனம்—வி. வெங்குசாமி ஐயர் Elements of Theosophy—V. Vengusamy Iyer	425
5.	நக்ஷத்ர சேவகர்களின் சங்கம்—சிறுவர்களுக்கு கடிதம் Servants of the Star—Letter to Children	428
6.	ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜய்யர் Atmabodham—Yogi Sundararajier	434

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வராதது பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ கன்கார்டியா ஹாலில் ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூலமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும்,

பார்சல்கள் வாங்கும்பொழுது அடியிற்கண்ட விலாசம் சரியாக யிருக்கப்பட்ட லேபிலைப் பார்த்து வாங்குங்கள்.

உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி முறப்பா கவர்மேண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா, கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோகிக்கத்தகாத மருந்துகள் பலவற்றைப் பிரசுரம் செய்து அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள் மருந்தை அம்மாதிரியாக நம்புவீர்களென்று ஓர் சந்தேகம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் வரவழைத்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் சந்தானம், ஆயுசு, பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்கும் மனிதருக்கு ரத்தமே மூலமாயிருக்கிறது. ஆனதால். ஆரோக்கிய பாக்யமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுத்தமாய் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதவசியம் இல்லாவிட்டால் நானாவிதமான வியாதிகள் உண்டாகி மரணகால பரியந்தம் விசனத்திற்கு ஆளாக்குகிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனிஷ்டான் தேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமிசிரியை தருவித்து அதில் முறப்பா செய்திருக்கிறோம். சாலாமிசிரி முறப்பா மூத்திரசம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இரத்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்பதையும் கை, கால், தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும் இன்னும் அநேக வித வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தி தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அப்படி கொடுக்கிறதில் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி முறப்பா மிகவும் மேன்மையானது தவிர மற்றெதுவும் இம்முறப்பாவுக்கு ஈடாகாது. இம் முறப்பாவில் எவ்விதமான அசுசி பதார்த்தங்கள் சேருகிறதில்லை. மிகவும் மேன்மையான பதார்த்தங்களும் அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்முறப்பா சாலாமிசிரியால் செய்யப்படவில்லையென்று ரூபிக்கிறவாகளுக்கு 1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும். அப்படி கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக்கொடுக்கும் 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதயான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி. மூலமாய் தங்கள் இருப்பிடத்தை பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம்.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி. மன்னுலால் டில்லி வைத்தியர்,

நெ. 5. ஆவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

சொற்பகாப்பிகள்தான்! சொற்பகாப்பிகள்தான்!

பூர்ணசந்திரோதயம்:

நான்காம் தொகுதி.

பகவான் கௌதம புத்தர் பிதகொர்ராஸ் தேவாபி (ஷோடசகலாமாலை) ஸ்ரீ அன்னிபெஸெண்டு, கர்னல் ஆல்காட்,	சரித்திரங்கள்.
பூலோகபுவர்லோக சம்பந்தம். அகல்யா சாபவிமோசனதத்வம்	முதலிய வியாசங்கள்

காலஞ்சென்ற பத்திராதிபரும் மதுரை பிரஹ்மக்ஞான சபைத்தலைவருமான ப நாராயண ஐயர் சரித்திரம்

இவைகள் அடங்கியது

முந்தினவர்களுக்குத் தான் கிடைக்கும்

பைண்டான புத்தகம் விலை ரூ 2—4—0

முந்துங்கள்! முந்துங்கள்!!

தியானக்கிரம விஷயம்.

தியானக்கிரமவிஷயம்:—(கே. யஸ். ராமச்சந்திரய்யர்) தியானத்தின் பிரயோஜ மென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவனவன் தினசரி நடபடிக்கைகளில் ஸத்யத்தையும், தர்மத்தையும் சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப்பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குதலேயாம். அதற்கு இலகுவாக "ஸற்குரு சாணங்களில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் அப்பியசிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் நமது அநுஷ்டானத்தை நேர்மைப் படுத்தக் கூடிய ஓரோர் நற்சிந்தனையாகவும் வகுக்கப்பட்டு, தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிரசுரமாகி யிருக்கின்றன. எல்லோரும் வாங்கிப் படித்து தியானித்து நற்பயன் பெறுமாறு விலை சொற்பமாக 4-அணு வீதம் ஏறபடுத்தப் பட்டிருக்கிறது.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 7	1917-௵ மார்ச்சு மீ நள ௵ பங்குனி மீ	பகுதி 11

தற்கால நிலைமை.

சென்ற பிப்பிரவரி மீ 17உயன்று மதுரை காலேஜின் பழய மாணாக்கர்கள் அக்காலேஜின் பெருநாளை கொண்டாடினார்கள். பழய மாணாக்கர்களில் ஒருவரான ராவ் பஹதூர் பி. சுப்பராய ஐயர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். 1856-ஆம் வருஷத்தில் மதுரைக் காலேஜுக்கு ஆதிகாரண பூதமான ஜில்லா ஸ்கூலானது துவக்கப்பட்டபொழுது, அப்பள்ளியில் பயின்ற மாணாக்கர்களில் ஒருவரானவரும், மதுரைக் காலேஜ் மாணாக்கர்களில் மிகவும் வயதின் மிக்காருமான, தென் இந்தியாவின் மாப்பெரும் கிழவராம் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள், மதுரைக் காலேஜைப் போற்றியும் அதன் அபிவிருத்தியை நாடியும் எழுதியிருந்த வியாசத்தை, அப்பெருநாள் கொண்டாட்டத்தின் காரியதரிசிகளில் ஒருவர் படித்தார். அக்காலேஜானது, கூடிய சீக்கிரத்தில் பி. ஏ. என்ற பரீக்ஷைக்கு மாணாக்கர்களை அனுப்பக்கூடிய முதல் கிரேட் காலேஜாக வேண்டுவது அவசியம் என்றும் ராவ் பஹதூர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் மூன்று லக்ஷம் போய் கொடுப்ப

தாகவ க்களித்திருப்பதும் சர்க்காரிலிருந்து எதிர்பார்க்கிற திரவிய சகாயமும், மேற்கூறிய மாறுதல் சீக்கிரம் நிறைவேறக்கூடியதென்றுஎண்ணக்காரணமாகஇருக்கின்றன என்று சொன்னர். பின்னும் சொன்னதாவது:

*
* *

"சென்ற 50 அல்லது 60 வருஷங்களுக்குள் நாட்டுக் கோட்டை செட்டிமார்களால் பழைய ஜீர்ணமான கோவில்களை உத்தாரணம் செய்வதில் மட்டும் சுமார் ஒருகோடியிலிருந்து இரண்டு கோடி ரூபாய் வரை செலவழிக்கப் பட்டிருப்பதாக திவான் பஹதூர் ராமசுவாமி செட்டியாரவர்கள் ஒரு சமயம் சொல்லியிருக்கிறார்கள். கோவில்களை புதுப்பிப்பதைத் தவிர ஏனைய தர்மங்களையும் முதன் முதலாய் ஆதரிக்கத் துவங்கியவர் மேற்கூறிய ராமசுவாமி செட்டியாரவர்கள் தான். இந்த ராஜதானியில் நாட்டுக்கோட்டைச் செட்டிகளைக் காட்டிலும் வியாபாரத்தில் மிகுந்தவர்கள் இல்லை. அவர்களைவிட தர்ம சிந்தனையுடையவர்கள் கிடையாதென்று நாம் தைரியமாய்க் கூறலாம். இவர்கள் நன்ருய் உணரவேண்டியதென்னவெனில் வித்யாதானத்தை விட சிலாக்கியமான புண்ணியம் யாதும் இலது என்பது தான். இவ்வுண்மையை அவர்கள் உணர்வார்களானல் இக்காலேஜ் முதலிய வித்யாலயங்கள் தழைத்தோங்குவதில் கொஞ்சமும் ஐயமில்லை.

*
* *

"மேலும் ராஜாக்களும் ஜமீன்தார்களும் தங்களுடைய உன்னதமான கௌரவத்தையும், அதைச் சார்ந்த உத்தரவாதத்தையும் உணரற் பலர். விசேஷமான சிரமமின்றி ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் தங்களாலியன்ற பொருளுதவியைச் செய்தால் இக்காலேஜை சீக்கிரம் முன்னுக்கு கொண்டுவர இயலும். ராமநாதபுரம் முதலிய ஜமீந்தாரிகளில் வசூலாகும் தர்ம மகமைத் தொகைகளைக்கொண்டு இக்

காலேஜில் வெவ்வேறு சாஸ்திர பீடங்களை ஸ்தாபித்தால் பெரும் உதவியாகும். ராமேசுவரம் போகும் மார்க்கங்களில் வழிப்போக்கர்களுக்கு அன்னமிடுவதற்காக அநேகம் சத்திரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் பெரும்பாலும் பிரயாணிகள் இடையிலுள்ள ஊர்களில் தங்காததால் இவை தற்காலத்தில் உபயோக மற்றவையாய் விட்டன. ஏன் என்றால் ஜனங்கள் எல்லோரும் ரயில் மார்க்கமாய் போகிறார்கள். இந்த சத்திரங்களின் தனங்களை ஏன் வித்தையின் அபிவிருத்தியின் பொருட்டு உபயோகிக்கக் கூடாது? சுமார் 115 வருஷங்களுக்கு முன்னால் தஞ்சாவூர் ராஜா ஷர்போஜியவர்கள் கர்னல் பிளாக்பர்டுக்குச் சொன்னதாவது, "சத்திரங்களுக்கு என்று கொடுக்கப்பட்ட தனங்களில் சிலபாகம் வைதிகலௌகிக வித்யையை கற்பிக்கவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது." அம்மாதிரியே இப்போது தஞ்சாவூர் ஜில்லா திருவையார் ஸம்ஸ்கிருத காலேஜ் விஷயத்திலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் இக்காலத்தில் உபயோகமற்றிருக்கும் சத்திரங்களின் வரும்படிகளை கல்வி யபிவிருத்தியின் பொருட்டு உபயோகித்தல் நியாயத்திற்கும் வழக்கத்திற்கும் பொருத்தமாகும்.

* * *

"சோழ மன்னர்களில் ஒருவரால் திருவொற்றியூர் கோவிலுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தானத்தை பிரகடனம் செய்யும் சிலா சாஸனத்தில் அக்கோவிலில் வியாகரண சாஸ்திரத்தைக் கற்பிப்பதற்காக ஒரு கல்லூரி நடத்திவர வேண்டுமென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. மேலும் திருமுக்கூடல் என்னும் மஹாவிஷ்ணு க்ஷேத்திரத்தில் புதிதாக கண்டுபிடிக்கப் பட்டதும் கி. பி. 1062 முதல் 1067 வரை அரசாண்ட சோழ மன்னன் வீரராஜேந்திர தேவர் கொடுத்த தானங்களைப் பிரகடனம் செய்யும் சிலா சாஸனத்திலும் அக்கோவிலில் வேதாத்யயனம், வியாகரணமாதி சாஸ்த்திரங்கள், இவைகளைக் கற்பிக்க பாடசாலை யேற்பட்டிருந்ததாக வெளியாகிறது. மேலும் சைவ வைஷ்ணவ

ஆகமங்களில் கோவில்களில் கல்வி கற்பிக்கும்படி கூறப்பட்டிருக்கிறது. மேலும் கோவிலில் இந்த பாகத்தில் பாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டுளது.

*
* *

"இப்படியெல்லாம் முன் வழக்கமும் சாஸ்திரவிதியும் இருப்பதால் மதுரை ஸ்ரீமீனாக்ஷியம்மன் கோவிலதிகாரிகள் என் மதுரைக் காலேஜில் தமிழ் பாஷாபிவிருத்தியின் பொருட்டு ஒரு வித்யாபீடம் ஸ்தாபித்தல் கூடாது? மதுரையிலேயே பொற்றாமரைக் கரையில் கடைச் சங்கம் நடைபெறவில்லையா? சங்கத் தலைவர்கள் இருவர் சிலைகள்கூட அங்கு இன்னும் காணப்படவில்லையா? கோவிலில் ஒரு பக்கத்தில் சங்கத்தார் கோவிலும் இல்லையா? சமஸ்கிருதத்தைவிட பழமையிலும் அழகிலும் முக்கியத்திலும் குறைவற்ற தமிழை விருத்திக்கு கொண்டுவரும்படி மேற்கூறிய முயற்சியை யெடுக்க யாது தடையுளது? சில வருஷங்களுக்குமுன் இருந்ததைவிட மேற்கூறிய தேவஸ்தானத்தின வரும்படி இரட்டித்திருக்கிறது. இதுவல்லவோ இக்காரியத்தைச் செய்ய நல்ல சமயம்? ஸ்ரீராமேசுவரம் தேவஸ்தானத்தில் ஸம்ஸ்கிருத பாடசாலை யொன்று புதிதாய் மதுரையில ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் இந்த ஸம்ஸ்கிருத பாடசாலைக்கு செலவழிக்கும்படி ராமேசுவரம் தேவஸ்தானம் "ஸ்கீம்" தீர்ப்பில் விதிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அந்த தேவஸ்தானத்தின் வரும்படியிலிருந்து போதுமான பொருள் கொடுத்து, மதுரை காலேஜில் ஸம்ஸ்கிருத சாஸ்திரபீடம் ஒன்றோ அல்லது இரண்டோ ஸ்தாபித்தால் அதுவும் சத்விநியோகமென்று எனக்குத் தோன்றுகிறது.

*
* *

"இவைகளைத் தவிர இதரதேவஸ்தானங்களிலும் முன்னைவிட வரவர வரும்படி அதிகரித்துக் கொண்டு வருகிறது. அந்த அதிக வரும்படிகளை கோவில் பூஜை முறையிலும், திருவிழாக் கொண்டாடுவதிலும் மட்டுமே செலவழிப்பது

தான் நியாயம் என்று எண்ணுவது தவறு. மேற்கூறிய பிரகாரம் வித்யா விஷயத்தில் செலவழிப்பது சாஸ்திர யுக்தம் என்று எல்லோரும் அறியற்பாலது.''

***

வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும், பொது நலம் நாடும் நோக்கத்திலும், அந்நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம் கொள்ளும் முயற்சியிலும், யாவரினும் மிக்காரான டாக்டர் ஸர். சுப்பிரமணிய ஐயர் அவர்களின் மேற்கூறிய அபிப்பிராயங்கள் புத்திமான்களுடைய ஆழ்ந்த யோசனைக்கும், பரிசீலனைக்கும் பாத்திரமானவை.

***

சென்னையை யடுத்த நுங்கம் பாக்கத்தில் புதிதாய் ஆயுர்வேத வைத்தியசாலை சில நாட்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப் பெற்றது. சென்னையில் கியாதிபெற்ற வைசியதர்மிஷ்ட சகோதரர்களான ராவ் பஹதூர் வி. கண்ணன் செட்டியாரவர்களும் சென்னை 'ஷெரீபு' வி. ராமானுஜம் செட்டியாரவர்களும் இந்த தர்மத்தை தங்கள் செலவில் ஸ்தாபித்து பொது ஜனங்களின் உபயோகததுக்காக அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். சென்னை ஹைகோர்டு ஜட்ஜு கனஸ்ரீ அப்துர்ரஹீம் அவர்கள் இந்த வைத்தியசாலையை பொது ஜனங்களுடைய உபயோகத்துக்கு உதவுமாறு "திறந்துவிடும்" மங்களத்தைச் செய்தார்கள். ராவ் பஹதூர் கண்ணன் செட்டியாரவர்கள் கனஸ்ரீ ரஹீம் அவர்களுக்கு உபசார வார்த்தை சொன்னார்கள். அப்பால் டாக்டர் ஸர். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வெகு அழகாக ஆயுர்வேதத்தின் சிலாக்கியத்தையும், மேன்மையையும் பற்றிப் பேசினார்கள். ஆயுர்வேத வைத்தியசாலையை செவ்வனே நடத்துவதற்கு வேண்டிய அவசியமான சரக்குகள் மருந்துகள் எல்லாம் பூரணமாய் அந்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

***

சென்ற பிப்பிரவரிமீ 24-ஆம் தேதிமுதல் புண்யபுரியென்ற புனாநகரத்தில் கொச்சி மஹாராஜா ஸர். ராமவர்மா

அவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் 8-வது ஆயுர்வேத ஸம்மேளனம் நடைபெற்றது. இந்தியாவின் பற்பல பாகங்களினின்று வைத்திய சாஸ்திர பிரவீணர்களும், வைத்திய சிகாமணிகளும் வந்திருந்தார்கள். மஹாராஜா அவர்கள் செய்த பிரசங்கமானது வெகு உற்சாககரமாயும், கம்பீரமாயும், மனக்கிளர்ச்சி செய்யக் கூடியதாயும் இருந்தது. திருவாங்கூர், கொச்சி நாடுகளில், மற்ற இடங்களில் கிடைக்கக்கூடாத அநேக அபூர்வமான வைத்திய சாஸ்திர கையெழுத்துப் பிரதிகள் இருப்பதாயும் சொல்லி தற்காலத்தில் ப்ளேக் என்ற பெரும் தொத்துநோய்க்கு சமானமானதும் எலிகளால் பரப்பப்படுவதுமான ஒரு நோயைப் பற்றி மேற்கூறிய கையெழுத்துப் பிரதிகளிலிருந்து எடுத்தெழுதிய சில சம்ஸ்கிருத சுலோகங்களை மஹாராஜா அவர்கள் படித்தார்கள். அது சபையோருக்கு ஆச்சரியத்தை விளைத்தது. இன்னும் மேல்நாட்டு வைத்தியத்தினால் சொஸ்தம் செய்யமுடியாதென்று கைவிடப்பட்ட அநேக வியாதிகளை சுலபமாக சொஸ்தம் செய்யத்தக்க ஆயுர்வேத முறைகளைப் பற்றியும் கூறினார்கள். அப்பால் அங்கே ஆயுர்வேதக் காட்சிசாலை ஒன்று ஸ்தாபிக்கப் பெற்றிருந்தது. அதைத் 'திறந்து' விட வேண்டுமென்று அதன் காரியதரிசியின் வேண்டுகோளுக்கு இணங்கி மதராஸ் வைத்தியரத்ன பண்டித கோபாலாசார்லு அவர்கள் உபந்யாசம் செய்து 'திறத்தல் மங்களத்தை'ச் செய்தார்கள். விருபாக்ஷமடத்தின் அதிபரான சங்கராசாரிய சுவாமிகள் சில ஆசீர்வசனவார்த்தைகள் சொன்னார்கள். அவர்களும் ஆயுர்வேத வைத்யத்தில் தேர்ந்தவர்கள். அப்பால் எல்லோரும் அந்த கண்காட்சியைச் சுற்றிப் பார்த்தார்கள். அந்த மஹாசபையில் ஸம்ஸ்கிருதத்திலும் மஹாராஷ்டிர பாஷையிலும் பெரும்பாலும் எல்லா வியாசங்களும் பேச்சுகளும் நிகழ்ந்தன. இந்திய ஆயுர்வேத சாஸ்திர அபிவிருத்தியின் பொருட்டு அந்த ஸம்மேளனத்தின் அபிப்பிராயங்களை மாக்ஷிமை தங்கிய ராஜப்பிரதிநிதி யவர்களிடம் நேரில் தெரிவிப்பதற்கு கொச்சி மஹாராஜா அவர்கள், பண்டித கணநாதசேனர், பண்

டித கோபாலாசார்லு அவர்கள் முதலிய பிரமுகர்களை நியமித்தார்கள். மேலும் இந்தியா முழுதும் உபயோகமாகும்படி ஆயுர்வேத மஹாவித்யாலயம்ஒன்று ஸ்தாபிக்கவேண்டுமென்றும் தீர்மானித்து அதற்கு திரவியம் சேகரிப்பதற்கும், விதிகளை ஏற்படுத்தும்படிக்கும், கொச்சி மஹாராஜா அவர்கள், கெய்க்வார் மஹாராஜா அவர்கள், ரீவா, ஆல்வார், டோங்கர்பூர், மஹாராஜாக்கள், ஸர் பாபாசங்கர், ஸர் சுப்பிரமணிய ஐயர் ஆதிய கனவான்களை ஒரு கமிட்டியாக நியமித்தார்கள். ஆயுர்வேத சாஸ்திரத்தையும் முறைகளையும் பற்றி மேல்நாட்டு வைத்தியர்கள் தப்பான அபிப்பிராயங்கள் கொண்டு, ப்ஹிரங்கமாக தங்கள் அறிவீனத்தை வெளியிடுகிறார்கள். அதை கண்டித்துப் பேசினார்கள். சட்ட நிரூபண சபைகளில் ஆயுர்வேத நிபுணர்களுக்கு பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டுவது அவசியம் என்று தீர்மானித்தார்கள். வைத்திய விஷயமாக சட்ட சீர்திருத்தம் செய்யும்பொழுது அவசியம் ஆயுர்வேதப் பிரதிநிதி இருத்தல் வேண்டும் என்று தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். இந்த சம்மேளனம் பிப்பிரவரி மீ 28உ யோடு முற்றுப்பெற்றது.

*
* *

சென்ற மாதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட கூலி ஒப்பந்தத்தைத் தவிர்த்தல் அவசியம் என்னும் விஷயத்தைப்பற்றி ஸ்திரீகள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட முன்வருவதைப் பார்க்க, இந்தியாவின் முன்னேற்றத்தில் இந்திய புத்திரிகளும் தங்களுடைய உத்திரவாதத்தை உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெற்றெனப் புலப்படுகிறது. பிரயாகையென்ற அலஹபாத்தில் பண்டித மோதிலால் நேரு அவர்கள் மனைவியார் அக்கிராசனத்தின்கீழ் அந்த நகர ஸ்திரீகள்கூடி இக்கூலி ஒப்பந்த முறையை உடனே நிறுத்த லவசியம் என்று தீர்மானித்தார்கள். பிப்பிரவரி மீ 27உ மாலை பம்பாயில் லேடி மேதா அவர்கள் அக்கிராச

ணம்வகிக்க, காலம்சென்ற ஜட்ஜு ரானடே அவர்கள் மனைவியார் ராமாபாய் அம்மாளவர்களும், ஸரோஜனிதேவி அவர்களும், லேடி பிடிட் அவர்களும் முக்கியமாய் ஸ்திரீகளுடைய கற்புக்கு ஹானி செய்கிறதும், இந்தியர்களின் அகௌரவத்துக்கும் அவமானத்துக்கும் காரணமா யிருக்கிறதுமான கூலிஒப்பந்த ஏற்பாட்டை உடனே நிறுத்த லவசியம், என்றும் அடுத்த மேமீ 31உக்குப் பிறகு கண்டிப்பாய் நிறுத்த வேண்டுமென்றும் ராஜப் பிரதிநிதியை பம்பாய் ஸ்திரீகள் கோருகிறார்கள் என்றும் அந்த தேதிவரையில்கூட இந்தக் கூலி ஒப்பந்த முறை நடைபெற வேண்டுவது அவசியமெனத் தோன்றினால்கூட, வாஸ்தவமாய்ப் புருஷன் பெண் ஜாதிகளாயிருக்கிற இருவரையுமே சேர்த்துக் கூலிகளாய்க் கூட்டிப் போகும்படிக்கும் மற்றவர்களைக் கூடாதென்றும் விதிக்கவேண்டிய தவசியம் என்ற தீர்மானத்தைப் பற்றியும் பேசினார்கள். ராஜப் பிரதிநிதியவர்களை நேரில் சந்தித்து பம்பாய் ஸ்திரீகளின் அபிப்பிராயத்தை தெரிவிக்க ஸ்திரீகளின் கமிட்டியும் நியமித்தார்கள். மதராஸ் மாதர்களுக்கு பிரதிநிதிகளாய் இரண்டு பெண்மணிகள் பம்பாய் கமிட்டியோடு சேர்ந்து ராஜப்பிரதிநிதி யவர்களைக் காணும்படி சென்னையிலும் தீர்மானிக்கப் பெற்றது. கல்கத்தாவில் ஸர். ஜகதீச சந்திர போஸ் மனைவியார் அக்கிராசனத்தின் கீழ் கூடிய சதஸிலும் கூலி ஒப்பந்த ஏற்பாட்டை உடனே நிறுத்தவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

அங்கம் 3 களம் 6.

(389 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கும்பாஜி.—மீரா இறந்தாலென் கவலைகளெல்லாம்தீரு மென்று நினைத்து இப்போது சுந்தரியை அனுப்பியிருக்கி றேன். அப்படி நான் நினைத்தது சரிதானோ? அவளிறந்தா லென் மனதுக்குச் சமாதானமேற்படுமென்பது நிச்சயம். ஜனங்களென்னைத் தூஷிப்பதை நிறுத்தி விடுவார்களோ? இப்போதே இவ்வளவு தூஷிக்கிறவர்களவளிறந்த பிறகென் னைத் தூஷிக்காமலிருப்பார்களா? கட்டாயம் தூஷித்துக் கொண்டுதானிருப்பார்கள். நாமவையெல்லாம் கவனியாம லிருக்க வேண்டியது தான். ஆனாலிப்போது புதிதாய் முளைத்திருக்கிற கஷ்டத்துக்கென்ன செய்வேன்? இதுவரை யில் ராஜ்ய காரியங்களைப்பற்றி கொஞ்சம்கூட கவலையில்லா மலிருக்க எனக்குத்தைரியம் தந்திருந்த மந்திரியை இழந்து விட்டேனே. அவரில்லாமலும், பிரதானியும் நியாயாதிபதி யுமில்லாமலுமெப்படி நான் ராஜ்பத்தைப் பரிபாலிப்பேன்? அது அசாத்தியமென்று தோன்றுகிறதே. இந்த சங்கடத் திற்கு நானென்ன செய்வது? உனக்கொன்றும் தோன்றவில் லையே சுந்தரீ,—ஐயோ, இதென்ன, எனக்குப்பயித்தியம் பிடிக்கப்போகிறதா? சேவகா,

(சேவகன் வருகிறான்)

சுந்தரீபாயந்தப்புரத்திலிருக்கிறாளாவென்று பார்த்து வா. (சேவகன் போகிறான்.)

மீரா இவ்வளவு நேரத்துக்குள்ளிறந்திருப்பாளா? என் கட்டளையை மீறமாட்டாள். ஆயினும்—சந்தேகமெ ன்ன? கட்டாயம் பிராணத்தியாகம் செய்திருப்பாள். (சேவகன் வருகிறான்) என்னடா?

சேவ.—மஹாராஜ், அம்மா அங்கேயில்லை.

கும்.—சரி, போ. (சேவகன் போகிறான்)

ஏனின்னும் சுந்தரி வரவில்லை? ஈசா, நானிப்படிக் கஷ்டப்படவோ இப்புவியிலென்னைப் பிறப்பித்தாய்? அந்தமீரா இருந்தும் சுகமில்லை, இறந்தும் சுகமிருக்கப் போகிறதில்லை. எதற்காகத்தான் நானிவ்வுலகிலிருக்கவேண்டும். இப்போதென்னையும் சுந்தரியையுந்தவிர வேறே யாருக்காவது நான் செய்தது சரியென்றபிப்பிராயமிருக்கிறதா? இருக்கிறதாகத் தெரியவில்லையே. ஒருவராவது மீரா வுண்மையிலே கெட்டவளென்றும் நான் செய்ததெல்லாம் சரியென்றும் சொல்லுகிறதாகத் தெரியவில்லையே. சாதாரண ஜனங்களுடைய அபிப்பிராயத்தையாவது நாம் கவனியாமலிருந்துவிடலாம். மந்திரி பிரதானியுள்பட எல்லாருமொரே வாக்காயென்னைக் குற்றம் சொல்லுகிறார்களே. இவர்களெல்லோருடைய அபிப்பிராயமும் தவறியிருந்து எங்களிருவருடைய அபிப்பிராயம் மட்டும் சரியாயிருக்கக்கூடுமோ? இவர்களறிவில்லாதவர்களா?—அவர்களுக்கென்ன தெரியும்? நானனுபவிக்கிற மாதிரி யனுபவித்தாலல்லவோ? அவர்களுக்குத் தெரியும். ஆனால் சுந்தரி மட்டுமென்னைப் போலவே அபிப்பிராயப்பட்டிருக்கிறாள். அவள் புத்திசாலி. சமாசாரத்தினுண்மையை யதிசீக்கிரத்தி லறியக் கூடிய சாமர்த்தியமுண்டு. இப்போதவளும் மற்றவர்களைப்போலவே அபிப்பிராயம் கொண்டிருப்பதாயிருந்தா லொருவேளை நான் மீராவிஷயத்திற் கொண்டிருக்குமெண்ணங்களெல்லாம் தவறென்று நினைத்தாலும் நினைப்பேன். அவளொரு மாதிரி எண்ணங் கொள்வதாயிருந்தாலதற்குத் தகுந்த காரணம் கட்டாயமிருக்கும். அவள் நான் செய்ததையெல்லாமங்கீகாரம் செய்கிறபடியாலது சரியாய்த்தானிருக்கவேண்டும்.—எங்கே, யவளின்னும் வரக்காணேமே. ஒருவேளை மீராபாய்—

(சுந்தரி யலங்கோலமாயோடி வருகிறாள்)

சுந்தரீ (கிட்ட நெருங்குகிறான்)

சுந்.—விலகி நில்லும். அருகில் வரவேண்டாம். மீராபாய்!! மீராபாய்!! (அஞ்சலிபந்தம் செய்கிறாள்) வீணையுமது

வாழ்நாளைக்கழித்து அகிருத்யங்களைக் கணக்கில்லாமற் செய்து உம்மையே பாழாக்கிக் கொண்டீரே! பாபியாகிய என் மொழிகளைக் கேட்டு நீரும் மதிமோசம் போனீரே! ஈசா, நான் கண்டது சுனவோ, அல்லது நனவோ, பக்தையென்ருலிப்படியுமொரு பக்தையுண்டோ? நதியில்குதித்த அந்த மீராபாயை தேவி தூக்கியெடுப்பதை நானிக்கண்களால் பார்த்தேனே. இக்கலிகாலத்திலிந்த மாதிரி தேவி ப்ரத்யக்ஷமுண்டாவதென்ருல் நம்பக்கூடியதாயில்லையே. ஆயினும் நான் சற்று முன் என் கண்களாற் பார்த்தேனே! என்னபக்தி! என்னபக்தி!! ஈசுவரன் பக்தவத்ஸலனென்றும் பூர்வயுகங்களில் தன் பக்தர்களுக்குப் பிரத்யக்ஷமானதுண்டென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். இக்காலத்திலது நடக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே. தன்னை நம்பினவர்களைக் கைவிடாதிருத்தலீச்னுக்குத் தானென்ன சிரத்தை! மீராபாய்! (கைகூப்பி) நானுனக்குச் செய்த அபராதங்களுக்கென்ன பலனையனுபவிக்கப்போகிறேனே. படுபாபியாய்ப் போய்விட்டேனே. எப்போதும் சத்தியம் தான் நிலைநிற்கும். அசத்தியம் கட்டாயமழிவுபடும். எப்படியிருந்தாலுமொரு நாளுண்மை வெளிப்படாமற் போகாது உம்மை வேணுமென்ருல் பொய்யாலே மாற்றலாம். ஈசனையேமாற்ற முடியுமா? நான்மீராவைப்பற்றிச் சொன்ன தூஷணைகளையெல்லாம் நீர்நம்பினீர்! ஈசனுக்குண்மை தெரியாதா? ஐயோ! என்ன தூஷணை தூஷித்தேன்! அவைகளைப்பற்றியிப்போது நினைத்தாலே என் மனம் பதறுகிறதே. எப்படித்தானப்போது தூஷித்தேனோ! என்ன பாபம் செய்தேன்! ஈசா, நீதானுன் கருணையாலென்னைக் காப்பாற்ற வேணும், என்னை மன்னிக்கவேணும்.

தம்:—சுந்தரீ, சரியான புத்தியுடன் தான் பேசுகிருயா?

சுந்:—இப்படியுமொருவரைப் பார்த்துக்கேட்க உமக்குத் திறமுண்டா? நான் பிதற்றவில்லை. மீராபாயை சாதாரணமான ஸ்திரீயென்று நினைத்தீர்? நீரெப்போதவளையரண்மனையினின்றும் நீக்கினீரோ, அப்போதேயுமது மதியையிழந்தீர், செல்வத்தையிழந்தீர், சுகத்தையிழந்தீர் சகலத்

தையுமிழந்தீர். பக்தியில் கரைகண்டவள் அந்த மீராபாய் இவளையும்முடைய பத்தினியாயடைய எவ்வளவு கோடி ஜன்மங்களிற்றவமிருந்தீரோ, எவ்வளவு நல்ல கர்மங்களைச் செய்தீரோ. அவளையடைந்துமவளை யாதரிக்க உமக்குத் தெரியவில்லையே. ராஜ்யத்துக்கு லக்ஷ்மிபோலிருந்தாளே ஜனங்களைத்தன் குழந்தைகள் போல் பாதுகாத்து வந்தாளே. ராஜ்ய பரிபாலன விஷயங்களில் கூட மந்திரிக்குமுமக்கு மெவ்வளவோ தடவைகளில் புத்திமதி கூறியிருக்கிறாளே நீரே அதைப்பற்றி வியந்து பேசியிருக்கிறீரே. அவளையிழந்த ஜன்மமுமக்கெதற்கு? எல்லாரும் வேண்டுகிற லக்ஷ்மி வலுவில் வந்தாலவளை வேண்டாமென்று தள்ளுவாருமுண்டோ? இப்பேர்ப்பட்ட மகாபக்தையான மீராபாயைத் தள்ளிவிட்ட உமக்கினிமேலொருக்காலும் க்ஷேமமுண்டாகாது. நசித்துத்தான் போகப்போகிறீர்.—ஐயோ, நானும்மைக் கடிந்து பேசவும் வேண்டுமோ, இவையெல்லாவற்றிற்கும் காரணம் நானல்லவா? உமது மனதைக் கலங்கச் செய்தது நானன்றோ? ஐயோ, பாபியாய் விட்டேனே. ஒரு ஸ்திரீக்கென்ன கெட்டகுணமிருந்தாலுமிருக்கலாம். பொறாமை மட்டும் கூடாது. அது எதைத்தான் செய்யச் சொல்லுமெதைத்தான் செய்யச் சொல்லாதென்பதே கிடையாது. எனக்கு மீராவிடத்திலிருந்த பொறாமையாலல்லவா இவ்வளவு கெட்ட கிருத்யங்களைச்செய்யத் துணிந்தேன்? அவளையமன் வசமொப்புவிக்கவுமென் மனமஞ்சவில்லையே. ஒரு ஸ்திரீ மற்றொரு ஸ்திரீயை அதுவும் சகோதரிபோற் பழகிவந்த ஒரு ஸ்திரீயைக் கொல்லயத்தனிப்பதென்றாலெவ்வளவு கொடியதாயிருக்கவேண்டுமப் பொறாமை? மனதைக் கலங்கச் செய்து அதைக் கடினமாக்கி செய்யக்கூடாத காரியங்களையெல்லாம் செய்யத் தூண்டிற்றே இதைப்போல் கேடு விளைவிக்கும் குணம் வேறு கிடையாது. என்னையென்ன பாடு படுத்திவிட்டது? ஒரு ராக்ஷஸியினும் கேடுகெட்டவளாயென்னையாக்கிற்றே. இந்த மீராபாய்க்குத் தீங்குவிளைவிக்க எவர் மனம்தான் துணியும்? என்மனமேயிந்தப் பொறாமை யில்லாதிருந்தாற்றுணிந்திராதே.—நானிப்போதென்ன செய்வது? அந்தமாதுமணிக்குச் செய்த அபராதத்

தை நினைத்துப் பார்க்கும் போதென்மனம் பதைக்கிறதே அந்தப் பழியைத் தீர்க்க நானென்ன செய்வேன்? எப்படி யிந்தப் பெரும்பாபத்தைத் தடுப்பேன்? இப்போது மீராபா யிடம் சென்று நான் செய்ததை யெல்லாம் சொல்லியவளு டைய மன்னிப்பைக் கேட்டாலவள் கட்டாயமென்னை மன் னிப்பாளென்பதிற் சந்தேகமில்லை. அவள் மனது எப்படிப் பட்டது, ஆஹா? பிறர் துன்பப்படப் பார்த்துச் சகி யாள். அதுவும் நான் வருந்தப்படுவதைப் பார்த்தால் பொறுக்கவேமாட்டாள். ஆனால் அவளுக்கிவ்வளவு தீங்கை விளைவித்த நான் திரும்பவுமவள் முகத்திலெப்படி விழிப் பது? அவளென்னை வெறுக்கமாட்டாள். எனக்குத்தான் ரொப்பவும் கூச்சமாயிருக்கிறது.—கூச்சப்பட்டுப் பிரயோ ஜனமென்ன? நான் செய்திருக்கிற பாபத்துக்கெணக்கு மா னவமானம் வேறுண்டா? சகல ஜீவன்களிலும் கேடுகெட்டுப் போனேனே. அந்த சர்ப்பங்களுக்கிருந்த இரக்கங்கூட எனக்கில்லாமற் போயிற்றே. இவ்வளவு காலமென் வாழ் நாளை வீணாய்க்கழித்தது போதாதா? இன்னமுமப்படியே கழிக்க வேண்டுமா? இனிமேலெனக்கிவ்வுலகிலென்ன இரு க்கிறது? இப்புவியிலிருக்கும் வஸ்துக்களிலெது சாச்வதம்? எல்லாமநித்யம். அவைகளிலாசைவைத்தல்லவோ நாம் கெட் டுப்போகிறோம். நம்முடைய வாஸ்தவமான ஸ்திதியை மறந்து கானல் ஜலம் போலிருக்கும் கீர்த்தி, யசஸ் முத லிய விஷயங்களிலாசைகொண்டு மதியை யிழந்து நாமழி ந்து போகிறோம். நான் மீராபாயைவிட எல்லா விஷயத்தி லும் மேல்பட்டவளென்கிற பெயர் வேணுமென்றெண்ணங் கொண்டந்தப் பெயரிலாசை வைத்ததாலல்லவா இவ்வளவு கேடுகளுமெனக்கு நேரிட்டன. கடைசியிலெது வென்றது. பொறுமை வென்றதா? பேராசை வென்றதா? பகவத் பக் தியே வென்றது. அதுதான் நிலை நிற்கும். நீடிய நன்மை யைக் கொடுக்கும், அழியாச்ரேயசையளிக்கும். அதையறி யாதிவ்வளவு காலம் மோசம் போனேன். இனிமேல் நா னென்ன செய்யவேண்டும். இனி யிந்த ராஜ்யத்திலாவது அரண்மனையிலாவதொன்றிலும் பிரியமில்லையே. இப்போ து கூட இங்கே வந்திருக்கமாட்டேன். ஆனால் நான் கண்

டதையென் பாபகிருத்யங்களுக்கெல்லாம்பாத்யப்பட்டிருக்குமுமக்குச் சொல்லாமற் போவது சரியல்லவென்று நினைத்திங்கு வந்தேன். அந்த மீராபாயிருக்குமிடத்தையடைந்தவள் கால்களில் விழுந்து அவள் மன்னிப்பையடைந்தால்தானென் மன மடங்கும். அவளிப்புவியிலிருக்கிறாளோ, இல்லையோ, தேவியவளுக்கென்ன ஆச்ஞாபனம் செய்திருக்கிறாளோ? ஒன்றும் தெரியவில்லை. எப்படியிருந்தாலுமெனக்கு பக்தி செய்வதை விட என்னவிருக்கிறது? என்பாபத்தைத் தொலைக்க ஈசனைத்தொழுவதைவிட வேறென்ன மார்கம்? நானக் ஞானத்தாற் செய்து சுமத்திக்கொண்ட என் பாப கர்மங்களைக் கழிக்க நாடுதோறும் சென்றென்னனுபவங்களை யெல்லாருக்கும் சொல்லி பக்தியின் ச்லாக்யத்தை யெடுத்துக்காட்டி மீராபாயின் குணகணங்களையும் சொல்லிக்கொண்டு வருவதைவிட வேறெனக்கென்ன வழியுண்டு? அப்படித்திரிந்து கொண்டு வரும் காலத்திலென் பாக்ய வசத்தால் மீராபாயைக் காண நேரிட்டதானாலென் ஜன்மம் கிருதார்த்தமாய்விடும். அவளோடு கூடவேயிருந்தவளிடமிருந்து விஷய தத்வங்களைத் தெரிந்து, அவளுக்குச் சுச்ரூஷை செய்து காலங்கழிப்பதைவிட எனக்கு வேறென்ன பாக்யம் கிடைக்கக்கூடும்? அவளுடைய சம்சர்க்கத்தினாலேயே என் பாபங்களெல்லாம் நசித்து விடுமே. அவள் கூடவிருந்தாலே யென்னிடத்திலிருக்கும் கெட்ட குணங்களெல்லாம் மாறி எனக்கு சத்வகுணம் விருத்தியுண்டாகுமே. என்ன பக்தி! என்ன பக்தி!! அம்பிகாஸாந்நித்யமுண்டாயிற்றே. அவளுக்காதி முதல் விரோதியாயிருந்து கொண்டு வந்த எனக்குக் கூட அவளுடன் கூடச் சென்றதால் அம்பிகையைக் காணும்படியான பாக்யமுண்டாயிற்று. ஆனாலந்த சந்நிதானத்திலிருக்க முடியாமல் மூர்ச்சையாய் விட்டேன்.—உனக்கல்லவோ

கும்—என்ன, சுந்தரீ?

சுந்—உனக்கேக வசனம் போதாதோ?

கும்—சேவகா

சுந்—கூப்பிட்டுப்பார் யாராவது வருகிருர்களா பார்ப்போம். வீணுய்க் கத்தாதே. நானிங்கே வரும்போதே சேவகர்களுக்கெல்லாமாக்ஞை கொடுத்துவிட்டுத்தான் வந்தேன். நீ கூப்பிட்டுப் பிரயோஜனமில்லை. நான் சொல்லுகிறதைக் கேள் உனக்கல்லவோ அந்த மீராவையாதரிக்கத் தெரியவில்லை. ஈசனுக்குத் தெரியாதா? நமக்குத் தான் அக்ஞானம், அவித்யை. ஈசனுக்கதுகளுண்டா? தன் பக்தையைத்தானறியாரா?—அதெல்லாமிருக்கட்டும். நீ செய்த காரியத்தை நீயே யோசித்துப் பார்த்தாயா? அகத்தினழகு முகத்திற் தெரியவேண்டாமா? மீராவைப் பார்த்த பிறகவளைப் பற்றிக் கெடுதலாய் நினைக்க யாருக்காவது மனம் வருமா? நானுன்னைப் பொறுமையாற்றாண்டிவிட்டேனேயொழிய அவளுடைய குணமும் பக்தியுமெனக்குத்தெரியாதா? ஒரு ஸ்திரீ யறிந்ததையரசனறியவில்லையென்ருல் நீயென்ன அரசன். நீயா இந்த ராஜ்பத்தையாளப்போகிருய்? அரசனுக்கொருவரைப்பார்க்கும் பொழுதே அவரவர்களுடைய குணங்களையும் கண்டு பிடிக்கும் சாமர்த்தியமிருக்கவேண்டும். துஷ்டர்களை நல்லவர்களிடத்திலிருந்து பிரித்தெடுக்கத் தெரிய வேண்டும். தன் பத்னியாக அடைந்து வெகுநாளாய்ப் பழகி வந்த ஒரு ஸ்திரீயினுடைய உண்மையான குணங்களைக்கண்டுபிடிக்க முடியாத நீயா ராஜ்யத்தைத் தாங்கப்போகிருய்? ராஜ்யத்திலெப்படி நியாயத்தை நடத்துவாய்? மேலும் நான் மீராவைப்பற்றி உனக்குச் சொன்ன தூஷணைகளையெல்லா முண்மையென்றே நினைத்தாயல்லவா? ஒருவர் சொல்வதிலுண்மை யெவ்வளவு பொய் யெவ்வளவு என்றுன்னுற் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்றே. எவரெது சொன்னுலும் நம்புகிறதா ராஜனுக்கு லக்ஷணம்? சிறு பிராயம் முதலென்னுடன் பழகிவந்த உனக்கு நான் பொய் சொல்லுகிறேனென்பது தெரியவில்லையென்ருல், ராஜ்ய பார விஷயங்களிலுண்டாகுமநேக வழக்குகளிலுண்மையுனக்கெப்படி விளங்கும்?—மீராவைக்கெட்டவளென்

று நினைக்க உனக்கெப்படி மனம் துணிந்தது? கொஞ்சமா வது யோசித்துப்பார்த்தாயா? ஒரு பக்கிரி மகரகண்டியொ ன்றையவளிடம் கொடுத்ததற்காக அவள் மீது கெட்ட அபிப்பிராயம் கொண்டாயே என்னுடைய வலையிற்சிக்கி மதி யையிழந்ததலல்லவா அப்படி நினைத்தாய். தினம்தோறுமள வில்லாத்திரவியத்தையும் கணக்கில்லாத நகைகளையும் தா னம் செய்கிற மீராபாய்க்கிந்த கண்டிகை மீதாசையுண்டா குமா? இதைப்போலெவ்வளவோ கண்டிகைகளைத்தானம் செய்திருக்கிருளே. அப்படியதன் மீதாசையிருந்திருக்கும் பக்ஷத்திலதைத் தனக்கெடுத்துக் கொள்வாளா? அல்லது கிருஷ்ண விக்கிரஹத்துக்குப் போடுவாளா? மேலுமதைக் கொடுக்கிற நீ அவளுடைய சோரபுருஷனென்று நினைக்கிற புருஷனக் கண்டிகையை யவ்வளவு ஜனக்கூட்டத்துக்கு நடுவில் வந்து கொடுப்பானு, அல்லது கொடுத்தனுப்புவானு? இதையெல்லாம் யோசிக்கமுடியாமற் புத்திகெட்டுப் போ ஞயே, வலுவில் வந்த பாக்யத்தை விலக்கித் தள்ளினுயே இனி நீ என்ன செய்யப்போகிருய்? உன்னுடைய பாபத்தை யெப்படிக் கழிக்கப் போகிருய்? உனக்கெப்படி பாபவிமோ சனம் கிடைக்கும்? நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன். இனியுன்னிஷ்டமெப்படியோ அப்படிச் செய். இவ்வளவு காலம் வீண் ஜன்மம் கழித்தது போதும். இனி மேலாவது நல்வழியிலிருந்து காலம் கழிக்கவேணும். மீரா பாயிவ்வுலகிலிருக்கும் பக்ஷத்திலவளைக் கண்டு அவள் கா லில் விழுந்து அவள் மன்னிப்பைப் பெற்றுதிரும்பவும் அவளை ராஜ்யத்துக்குக் கொண்டுவந்தால் தானுனக்கு நலம், ராஜ்யத்துக்கும் நலம் இல்லாவிட்டால் நீயுமழிந்துபோவாய் ராஜ்யமுமழிந்து போகும் இதிற்சந்தேகமில்லை அப்படி மீரா பாயைக் கண்டுபிடிக்க முடியாதபக்ஷத்திலினிமேலாவது பகவத் பக்தியோடு கூடியிருந்து ஜனங்களிடத்திலும் ஈசுவர பக்தியையுண்டாக்கும் வழிகளைத்தேடி நல்ல கிருத்யங்களா

னும் பச்சாத்தாபத்தாலும் நீ மீராவுக்குச் செய்திருக்கிற அபராதத்தை மாற்றிக்கொள்ளவேணும். இதுதான் நான் போகுமுன்னுனக்குச் சொல்லவேண்டிய வார்த்தை. நான் மீராவைத் தேடப்போகிறேன். ஈசா, எல்லாமுமதருள். மீரா பாய், எல்லாமுனது மகிமை. (போகிருள்.)

கும்:—ஐயோ, மீராபாய்! (மூர்ச்சையாகிக்கீழே விழுகிருன்).

(திரைவிழுகிறது)

(இன்னும் வரும்,)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர். யம். ஏ.

நன்மொழி.

கடவுள்.

ஒரு விஷயத்தை நாடப்பரபரப்பு அடைவானுக்கு, அது கிடைத்த தன்மேல் அவன் மநம் வேறுபடும். முந்திய விஷயத் தில் நிற்காது. அவன் மநம் வேறொன்றை நாடிச் செல்லும். இவ் விதம் மநம் சஞ்சலப்படும். ஆகையால் அற்ப விஷயத்தின் சிந்தனை யைக் கூட விட்டு ஒழிதல் சிறிய கார்யமன்று.

ஒருவன் ஞானமார்க்கத்தில் அபிவிருத்தி யடைய வேண்டுவா னுகில், தன்னை முற்றும் மறக்கவேண்டும் துறக்கவேண்டும். தன் னைத் துறந்தவன், சுதந்தரமுள்ளவனுவான்; ஸாவதானமாயிருப் பான். நம்முடைய நலத்தைக் கெடுக்கும் நித்ய சத்துருக்களான வர் (காமக்குரோத லோப மோக மத மாத்ஸர்யங்கள்) இரவும் பக லும் நம்மைத் தம் வசமாக்கி, தம் மாயவலைக்குள் சிக்குண்டு தப் பிக்க, எங்கே சமயம் நேரிடுமெனக் காத்திருக்கின்றன. அச்சோ தனையான வலைக்குட்படாமலிருக்கும்படி கவனமாயிரு. இறைவன் அருள் வேண்டுமெனப் போற்றிவாழ் இதுவே நாதரின் உபதேசம்.

—கிறிஸ்துவின் ஒழுக்க முறைநூல்.

பெண்கல்வி.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

என்னும் ஆன்றோர் கல்வியின் பொருளையுற்று நோக்குங்கால் பொதுவாக இஃது ஆடவர் பெண்டிர் யாவர்க்கும் நீதிகற்பிக்க வந்ததோர் செய்யுளென்பதைக் காட்டினும் சிறப்பாகப் பெண்களுக்காகவே கூறப்பட்டதோர் நீதிச் செய்யுள் என்று கூறுவது மேலாகத்தோன்றும். ஆதலால் கல்வியைப் பெண்கள் கற்றல் அவசியமென்பது இனிதுவிளங்கும். கல்வியின் பயனும் அதன்பெருமையும் இத்துணைய வென்பது இதுகாறும் ஒருவராலும் வரையறுக்கப்பட்டதன்று. இத்தகைய மாட்சிமையுற்ற கல்வியை ஆடவரேயன்றிப் பெண்டிரும் கற்றுணரவேண்டுவதசியம் என்பதே இவ்வியாசத்தின் முக்கிய நோக்கமாம்.

யான் இங்ஙனம் கூறுவதில், எனதினின்றும்மாறுபட்ட கொள்கையினராய்ச் சிலர் கிளம்பி, ஸ்திரீகள் கற்பதனாற் பயன் யாதுமில்லென்றும் முற்காலத்துப்பெண்கள் யாவரும் கற்றிருந்தனரோ வென்றும் வாதாடத்துணிவர். அவர்க்குப்பிற் கூறும் சமாதானம் ஒவ்வும்.

உலகில் ஒவ்வொருவர் தன்மையும் அவரதுசெய்கையாலன்றி யறியவியலாதென்பதுண்மை. அங்ஙனமே பண்டைக்காலத்து ஸ்திரீகள் கல்விபெற்றும் நாகரிகமடைந்துமிருந்தனரா வென்பதை நாம் நேரிற்பார்த்திரா விடினும் அவர்கட்கவ்வப்போதுண்டான உள்ள நிகழ்ச்சியிருந்தவாற்றானும் அவர்கள்கொண்ட ஒழுக்கம் முதலியவற்றானும் மற்றும் அவர்களது உயர்வமைந்தவும் போற்றப்படுபவுமாகிய செய்கைகளானும் அன்னோர் கல்விஞானம் பெற்றிருந்தன

ரென்றே யூகிக்கவேண்டியிருக்கிறது. அன்றியும் கல்வி மிகுதியாகக்கற்ற பெரியோர்களிருக்கும் உயர்ந்த நிலையையாவது தற்காலத்திற் பிரத்தியக்ஷமாய்க் கண்டறிந்தவர் கற்பதனாற் பயனில்லென்று கூறுவரா?

இனிச் சிலர், பெண்கள் கற்பதனாற் பயனுண்டென்னும் நம்பிக்கையுடையாராயினும் 'மாதர்கள் கல்வி பயின்று மேன்மையடைந்த அக்காலம் வேறு, இக்காலம் வேறு' என்னும் கொள்கையுடையராய்க் காலபேத வியல்புக்கேற்றபடி யொழுகவேண்டுமென்பார். உலகில் ஒவ்வோரிடத்தும் ஒரு காலத்திலில்லாதது மற்றொரு காலத்து வளர்ந்தும் ஒரு காலத்துள்ளது மற்றொரு காலத்துத் தேய்ந்தும் வருவதியற்கை. இவற்றுள் முன்னது முயற்சியும் பின்னது முயற்சியின்மையும் காரணமாகக்கொண்டு தோன்றுவனவாம். ஆதலால் கீழ்க்கூறியபடி இக்கல்வியும் நம்தேசத்தில் முன்னொருக்கால் பிரஜைகளின் நன்முயற்சியால் தலையெடுத்து வளர்ந்தும், பின் நாளடைவில் ஜனங்களின் முயற்சிக்குறைவால் அஃது சிறுகிச்சிறுகித் தேய்ந்துமிருக்கலாம். இவ்வாறு தேய்வுற்றதைக் கண்ட நாமும் செந்நெறி பிழைத்தோன் திசைமயங்கிற்றென மொழிவதை நிகர்ப்பக் காலத்தின்மேல் பாரத்தைச் சுமத்தி இக்கல்வியை வளரச் செய்வதற்கேதுவான சாதனங்களையும் முயற்சிகளையும் தேடாமல் வாளாவிருப்பது பெரிதும் பேதமையன்றோ.

ஒன்றை நிரூபிக்க வேண்டின் சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் மூன்று சாதனங்கள் உண்டு. அவ்விதிக்கிணங்கவே நம்மாலெடுத்துத் தாபிக்கப்படும் ஓர் விஷயமானது முன்னர் ஈசுவராக்ஞையாகிய வேதத்திற்கு பொருந்தியுளதாவென்றும் பின் யுக்திக்குப் பொருத்தமானதாவென்றும் அதன்பின் அஃது அநுபவத்திலும் பொருத்தமுடையதாவென்றும் ஆராய்ந்தறியவேண்டும்.

மேற்கூறிய இம்மூன்று சாதனங்களைக்கொண்டும் ஆராய்வோர் பெண்கல்வியை மறார் என்பது திண்ணம்.

மேல்நாட்டைக் காட்டிலும் நம்தேசத்தில் கல்விகற்போர் மிகச் சிறு தொகையினர், அவரினும் நனி மிகு சிறு தொகையினராவர் பெண்பாலராயிருந்து கல்விகற்போர் இங்ஙனம் நம்தேயத்தில் தமது நல்வினைப் பயனாற் கற்றற்கு முன்னேறி வரும் சிறு பான்மையரான ஸ்திரீகளையும், அந்தகாரத் தகப்பட்ட மாந்தர் சிலர் தாம் ஒளிபெறும் பொருட்டேற்றிய தீபம் சுடர்விட்டெரியத் தொடங்கும் போது அதனை யவிக்க விரைவில்வரும் சூறைக் காற்றினைப் போலும் செல்வப் பொருள் சிறிதுமின்றி வறுமையாற் பிடியுண்டு வயிற்றிற்கின்றி வருந்து மிரவலாளன் வந்தேற்க அவற் கிரங்கித் தம்மாலியன்றது கொடுக்கத் துணிவாரைத் தடுக்கப் புகுவார் போலும், பெண்கள் கற்பது பேதமையென்று பிதற்றி அவர் கற்பதைத் தடுக்க முன்வருவார் பலராயுள்ளனர். இன்னும் பலர், மாதர்கள் கற்பதாற் செருக்குற்றுக் கேட்டிற் காளாவர் என்றும் கூறுவர். இவரே கரும்பின் கட்டி கைப்பென்பாரையும், ஆவின் பால் அரும் புளிப் பென் பாரையும் நிகர்ப்பதுமன்றி, அவ்விரண்டும் உயிர்க் கிறுதிவிளைக்கும் பொருள்களெனக் கூறுமறிவினரையும் நிகர்ப்பர். இங்ஙனம் கூறுவோர் ஆடவர் கல்வியை மாத்திரம் எங்ஙனம் அங்கீகரித்தனரோ தெரிந்திலது.

ஆடவர் தம் சரீரத்தை ஒவ்வோ ரபாயத்தினின்றும் நீக்கி எங்ஙனம் பரிந்து பாதுகாக்கின்றனரோ, அங்ஙனமே ஸ்திரீகளும் தங்கள் சரீரத்தைப் பாதுகாக்கக் கருதாரோ? ஆடவர் தம்மைப் பிணி முதலியவை யணுகாதபடி பிரதி தினமும் தங்கள் சரீரத்தைச் சுத்தி செய்து சுகமாக விருக்கவெண்ணுதல் போல் பெண்டிரும் செய்யத் துணியாரோ? அவைபோல், ஆடவர் தமது அறிவை விருத்தி செய்தற் பொருட்டு அதற்குவேண்டிய பல கல்விகளையும் பயிலத்

துணிவாராயின் அரிவையரும் அவ்வாறே தமது அறிவை விருத்தி செய்வதன் பொருட்டுக் கல்வி கற்றல் வேண்டாமோ?

கை, கால் முதலிய உறுப்புக்கள் எங்ஙனம் எல்லோருக்கும் இயற்கையாகவே யமைந்துளவோ, அவ்வாறே அறிவும் ஆண்பாலார் பெண்பாலார் யாவருக்கும் இயற்கையாலமைந்துளதோர் பொருளாம். இல்லாத பொருளை யடைய முயல்வது தான் மிகவும் அருமையே யன்றித் தன்னிடத்துள்ளதைச் செம்மைப் படுத்தி நன்கு பாதுகாப்பதுவுமரிதன்றே? ஆதலால் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள தான ஞானமுளையைக் கல்விநீரால் வருந்திவளர்க்க முயலக்கடவர் அங்ஙனம் முயலாராயின் அவ்வறிவு தன்னையுடையார்க்குப் பட்டமரம்போற் சிறிதும் பயன்றரா தொழிவதுமன்றி அவரை நாளடைவில் கெடுத்துப் படுகுழியில் தள்ளக்காத்திருக்கும் அகப்பகையையும் ஒப்பாகும்.

இயல்பாகவே சிறு வயதில் ஒன்று சேர்ந்து விளையாடிக்கொண்டு திரிந்த ஒத்த வயதுடைய சிறுவன் சிறுமிகளாகிய இருவரும் வளர்ந்து தமது பருவத்தை, அல்லது ஏறக்குறைய இருபதாவது வயதை அடைந்தபின் அவ்விருவரின் தன்மைகளைப் பற்றியும் ஆராயப் புகுவோமாயின், அறிவு மாட்சியினும் குணமாட்சியினும் அப்பெண்ணைக் காட்டினும் அவளொடு பழகிய ஆடவனே மிக்க மேம்பட்டுக்காணப்படுகின்றனன். இங்ஙனம் நிகழ்தற்கு அவ்வாடவன் நாளடைவில்தான் வளரத் தன் கல்வியையும் வளர்த்து அஞ்ஞானத்தைத் தேய்த்தமையும், அப்பெண் தான் வளரத்தன தறியாமையையும் வளர்த்து அறிவைத் தேய்த்துக் கொண்டமையு மன்றோ காரணம்.

பெற்றோர்கள் தங்கள் புத்திரிகட்கு இளவயதிலேயே சிறுவர் சிறுமியோர் கட்கறி வூட்டும் நீதி நூல்களைக் கொடுத்துப் படிப்பித்தும் போதித்தும் கற்றுணங்கொழுகு முறை

களைக் காட்டியும் வருவராயின், பெண்கள் தம் பருவத்தில் எவ்வித உன்னத நிலையை யடைவார்களென்பது யாம் கூறவும் வேண்டுமோ? ஓர் ஸ்திரீ இங்ஙனம் கல்வி கல்லாளாயின் அவளுக்கும் மிருகத்திற்குமுள்ள பேதமென்? இவளை மணந்து வாழுமொருவன் தான் இருகால் விலங்கோடு வாழ்பவனையன்றோ நிகர்ப்பன்! கற்றதனாற் பெறும் பகுத்தறிவொன்றன்றோ விலங்கு ஜாதியினின்றும் மனுட ஜாதியைப் பிரித்து, அதனினும் மேலாகக் காட்டுவது. ஆதலின் இத்தகைய கல்வியைக் கற்பதனாற் போந்தபயன் எம்மட்டென்பதை யாவரும் நன்கறிய வேண்டும்.

'அரைகுறைக் கல்விஎன்றும் அபாயத்துக் காளாக்கும்' என்னும் கருத்துடையதோர் பழமொழிப் பிரகாரம் முறையுடன் கல்லாச் சொற்பக் கல்வியுடையாரிற் சிறுபான்மையோர் கெடுவாருண்டாயின், அதனால் பெண்கள் யாவரும் கற்றல் பொருந்தாதெனப் புகறல் பொருந்தாதென்க. ஓர் பெண் அரைகுறைக் கல்வியுடையளாயினும் அப்பெண்ணின் பெற்றோராவது, அன்றி அவள் கணவற் பெற்றுளாயிருப்பின் அவளது கணவனாவது அவள் கற்றுத் தெரிய வேண்டிய நீதி நூல்களையும் அறிவு நூல்களையும் அவர்கட்களித்துப் படிப்பித்துப் போதித்தும் வருமுறையில் மிக்க சிரத்தைகொண்டு நிற்பாராயின் கீழ்க்கூறிய பழமொழிதானின்ற விடந்தெரியாதகன்றுவிடு மன்றே ?

(இன்னும் வரும்)

டி. யம். மொகையதீன் கவிராயர்.

16-ஆம் அத்தியாயம்:

மனித சரீர அமைப்பு.

இவ்வத்தியாயத்தில் நம்முடைய சரீரங்களின் அமைப்பைப்பற்றி விசாரிப்போம். இச்சரீரங்களை நாம் இரவிலும் பகலிலும் உபயோகப்படுத்துகிறோம். இந்த விஷயத்தை மிகக்கவனமாயும் ஊக்கமாயும் அறிய முயன்றாலன்றி அதை யறிவது சுலபமன்று. ஆனால் அங்ஙனம் அறிய முயன்றால், அது மனதைக் கவரக்கூடிய விஷயம். பிரஹ்மக்ஞான சபையோரால் எழுதப்பெற்ற புஸ்தகங்களில் சரீர அமைப்பைப்பற்றி எவ்வளவு தெளிவாயும் வெளிப்படையாயும் சொல்லப்பட்டிருக்கின்றதோ அவ்வளவு சங்கதிகள் இதர புத்தகங்களில் கிடையா. பிரஹ்மக்ஞான புத்தகங்களில் கூறப்பட்டிருக்கும் விவரங்களை நாம் வாய்க்கப்பெற்றிருப்பது நமது நல்லதிர்ஷ்டம்தான்.

கிருஸ்து வேத புஸ்தகமாகிய விவிலிய நூலில் இயற்கையான சரீரமென்றும் திவ்விய சரீரமென்றும் இருவகை சரீரங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதர சரீரங்களைப்பற்றி சிற்சில விடங்களில் ஜாடையாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விவரங்கள் ஒன்றும் காணப்படவில்லை. கிறிஸ்தவர்களுடைய சாஸ்திரங்களினுடையவும் உலகத்திலுள்ள மற்ற ஜாதியார்கள் தேசத்தார்களின் சாஸ்திரங்களினுடையவும் சாராம்சமாயிருக்கிற பிரஹ்மக்ஞான புஸ்தகங்களிலோ அவைகளைப்பற்றி நன்றாக விளக்கியிருக்கின்றது. அதாவது (1) பூலோகத்தில் உபயோகிக்கிற ஸ்தூல சரீரம். (2) புவர்லோகத்தில் உபயோகிக்கிற இச்சா சரீரம். (3) சுவர்க்க லோகததில் உபயோகிக்கிற மானச சரீரம். (4) மகர்லோகத்தில் உபயோகிக்கிற காரணசரீரம் என நான்கு சரீரங்கள் நமக்கிருக்கின்றன. அவைகளை நாம் நன்றாய் அறிந்தால், இப்போது சாதாரணமாய்

அச்சரீரங்களை ஒருங்கே சேர்த்து உபயோகித்து வருவது மட்டுமல்லாமல் எந்தெந்த லோகங்களில் நாம் சஞ்சாரம் செய்ய இச்சிக்கிறோமோ அந்தந்த லோக சரீரத்தைத் தனித்தனியாகவும் நாம் உபயோகிக்கலாமென்று பிரஹ்மக் ஞானம் கூறுகின்றது. எவ்விதமெனில், நாம் சமுத்திரத்தில் ஒரு கப்பலையும் ஆகாயத்தில் விமானத்தையும் தரையில் வண்டியையும் உபயோகிப்பதுபோல ஒவ்வொரு லோகத்திலும் உபயோகிப்பதற்கு அததற்குத் தகுந்த சரீரம் நமக்கு அவசியமல்லவா? ஒரு காலத்தில் இவ்விஷயங்களை நாம் பூர்ணமாய்த் தெரிந்துகொள்வோம்.

அப்போது நாம் நம்மிஷ்டப்படி பகற் காலத்திலுங் கூட ஸ்தூல சரீரத்தை நித்திரையிற் கிடத்திவிட்டு இச்சா சரீரத்தோடு உலகத்தில் எந்த இடத்திற்கும் செல்லலாம். புவர்லோகம் முழுமையும் சுற்றிப் பார்க்கலாம்.

இதைப்பற்றி முதல்முதல் நாம் கேள்விப்படும்போது மிகவும் ஆச்சரியமாய்த் தோன்றுகிறது. ஆனால் இது பிரம்மக்ஞானத்தில் போதித்துள்ள அதிசயங்கள் பலவற்றுள் ஆரம்பமானது. பிரதிதினமும் இரவில் நம்முடைய ஸ்தூலசரீரம் நித்திரை செய்யும்போது நாம் அதை விட்டு சூக்ஷ்ம சரீரத்தோடு வேலை செய்கிறோம். ஏனென்றால் நாம் என்று சொல்லும் ஆத்மாவுக்கு நித்திரை கிடையாது. அவனுக்குக் கருவியாயிருக்கிற ஸ்தூலசரீரமோ நாம் ஏறிச் செல்லும் குதிரை முதலிய மிருகம்போன்றது. அது தூங்கவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் அது இறந்துபோம். ஆகையால் நாம் அதைத் தூங்கும்படி விட்டு இச்சா சரீரமாகிய புவர்லோக சரீரத்துடன் சஞ்சரித்து பல ஆச்சரியங்களைக் காண்கிறோம்.

சுவர்க்கலோக சரீரமென்ற மானச சரீரமானது இன்னும் அதிக ஆச்சரியகரமானதும் அழகுள்ளதுமா யிருக்கிறது. அந்த சரீரத்துடன் நாம் மானசலோகத்தில் சஞ்சாரம் செய்கிறோம். அவ்வுலகம் தான் நம்முடைய எண்ணங்

களுக்கு உற்பத்திஸ்தானம். அங்கிருந்து அவைகள் ஸ்தூல சரீரத்தின் மூளையில் வந்து சேருகின்றன.

மனிதனுக்கு ஜன்மங்கள் ஒழியும்வரை அழியாமல் நிலைத்திருப்பது காரண சரீரம் ஒன்றுதான். அது மற்ற சரீரங்களைவிட மிகுந்த அழகுள்ளது. ஏனெனில் நம்முடைய உத்தமமான பாகம்தான் அதில் சேர்ந்திருக்கும்.

அது ஸ்வர்க்க லோகத்தின் உன்னதமான படியில் அதாவது மகர் லோகத்திலிருக்கிறது. ஒவ்வொரு ஜன்மத்தின் முடிவிலும் நாம் அவ்விடத்திற்குப்போய் மறுஜன்மம் எடுக்க வேண்டிய காலத்தில் அவ்விடத்திலிருந்து திரும்புகிறோம்.

காரண சரீரம் நம்முடைய உண்மையான வீடு. ஒவ்வொரு ஜன்மத்திலும் சம்பாதித்த பொருள்களை அதாவது கர்ம்ம வித்துக்களை வைத்திருக்கும் பொக்கிஷவீடு. நாம் சேகரித்து வைக்கத் தகுந்தவை யாவும் அதில் திரட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

வி. வெங்குசாமி ஐயர்.

நக்ஷத்திர சேவகர்கள் சங்கம். *

2-ஆம் பாடம்.

அன்பே வடிவமான பிரபு.

நம்மில் சிலருக்கு வீட்டில் மூத்த சகோதரரிருந்தும் நாம் அவரை அடிக்கடிப் பார்ப்பதற்கில்லாமல் போகிறது. ஏனெனில் அவர் பள்ளிக்கூடத்திற்குப் போய்விடுகிருர். அல்லது வருஷத்தில் அநேக வாரங்கள் அலுவல் நிமித்தம் போய்விடுகிருர். அவர் அப்படி வெளியேறிப்போயிருக்க நாம் வீட்டில் அங்குமிங்கும் ஓடி விளையாடிவருகிருேம்.— ஆனல் நம்மை அவர் எவ்விதம் நேசித்துவருகிருரென்பதை அறிவோம். அன்றி நமக்கு எத்தன்மையான விளையாட்டில் அதிகப் பிரியமோ அதை அவர் நம்முடன் விளையாடுகிருரென்றும் தெரிகிருேம். அவர் இல்லாத காலத்தில் நமக்கு சந்தோஷத்தையாவது விசனத்தையாவது கொடுக்கும் விஷயம் நேரிட்டால், அவர் வரும்வரை அதை ஞாபகத்தில் வைத்திருந்து அவர் வந்தமேல் அவரிடந் தெரிவிக்கிருேம். அவர் எப்பொழுதும் நம்மை நன்ருகத் தெரிந்துகொள்கிருர். நாமெல்லோரும் ஈசுவரனுடைய சிறுபிள்ளைகள். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் சகோதரர்களாகவிருக்கிருேம். இப்பொழுது உயிருடனிருக்கும் நம்முடைய சகோதரர் எவ்விதம் வீட்டைவிட்டு பள்ளிக்கூடத்துக்கோ அல்லது வேலையினிமித்தமோ போயிருப்பதற்கொப்ப நம்முடைய சகோதரர்களில் சிலர் இந்த ஸ்தூல உலகத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

அவ்விதம் போன சகோதரர்கள் ஈசுவர கைங்கரிய நிமித்தமாகப் போயிருக்கிருர்கள். நாம் அவர்களைப் பார்க்க

---

* வாலிபர்கட்கு லிகித மூலமான ஸம்பாஷணையி (Junior Branch Correspondence)லிருந்து கே. யஸ். ராமசந்திர ஐயரால் மொழி பெயர்க்கப்பட்டது.

முடியாது. ஆனால் அவர்கள் நம்மைப் பார்க்கக்கூடும். அவர்கள் நம்மைக் காத்தும், நமக்குதவி புரிந்தும், கற்பித்தும் வருவதுடன், நாம் சரியான மார்க்கத்தை அனுசரிப்பதற்கு வேண்டிய விதமாய் நமக்குதவிப் புரியப் பிரயத்தனப்பட்டும் வருகிறார்கள். ஆகையால் நாம் அவர்களை நம்முடைய மூத்த சகோதரர்கள் அல்லது குருமார்களென்று அழைக்கிறோம்.

இந்த மூத்த சகோதரர்களில் ஒருவரும், அவர்களெல்லாரிலும் பெரியவருமானவர் இந்த ஸ்தூல உலகத்துக்கு மறுபடியும் வருவதாக வாக்களித்திருக்கிறார்.

எதற்காக நாம் அவரை எல்லாரிலும் பெரியவரென்று சொல்லுகிறோம்?—ஏனென்றால் அவர் எல்லா மூத்த சகோதரர்களைப் பார்க்கிலும் அதிக சாந்தமும், அன்பும், பட்சமும், அழகும் பொருந்தியவர். சில ஜனங்கள் அவரை "அன்பில் விளைந்த அமுது." என்கிறார்கள். மற்றவர்கள் அவரை கிறிஸ்து நாதர் (மைத்திரேயர், போதிசத்துவர்) என்கிறார்கள். அவருடைய சிறு குழந்தைகளாகிய நாம், நம்மை பிரியத்துடன் நேசிப்பவரும் தம்மைப்போலநாமும் வளரவேண்டுமென்றும் விரும்புகிற வருமான அவரை நாம் நம்முடைய மிகவும் ஆப்தமான மூத்த சகோதரராகச் சிந்திக்கலாம். நம்மவர்களில் ஒவ்வொருவரையும் அவர் அறிந்து வருவதுபோல், அவர் வருங்காலத்தில் அவரை அறிய வேண்டி நாம் எப்பொழுதும் அன்புள்ளவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், பக்ஷமுள்ளவர்களாகவும் இருந்துவர வேண்டுமென்பதே அவர் எண்ணம்.

நாம் அவர் வரவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமானாலொழிய அவர் ஸ்தூல உலகத்துக்கு வரமுடியாதென்று சொல்லியிருக்கிறார். சிறுவர்களாகிய நாம் அவ்விதம் செய்ய எவ்விதம் உதவி புரியலாம். நாம் என்ன செய்ய

வேண்டுமென்று அவர் இஷ்டப்படுவா ரென்பதைக் கண்டு பிடிக்க முயலுவோம்.

சூர்ய கிரணமும் சரீரமும்.

சிறுவர்களாகிய நாம் நம்முடைய தகப்பனைப்போ லிருக்கிறோம். நமக்கு வயதாக ஆக நாம் அதிகமாக அவரைப்போலாவோம். நாம் முதிர்ந்தவர்களானல், ஜனங்கள் சிலவேளைகளில் நம்முடைய தகப்பனரின் பிரதிபிம்பமாக நாமிருப்பதாக சொல்கிறார்கள். இப்பொழுது நம்முடைய பிதாவான கடவுளைப்பற்றி நினைக்க முயலுவோம் அவர் வெள்ளைவெளேர் என்ற பெரும் அக்னி ஜ்வாலையைப் போன்றவர். அதிக அழகில் மிகுந்தவர். மிக ஆச்சரியகரமானவர். அந்த வெண்மையான பிரகாசத்திலிருந்து சிலபொறிகள் கிளம்பி சூரிய கிரணம்போல், இப்புவிக்கு வந்து தங்களை சரீரங்களால் மூடிக்கொண்டன. வாலிபரானாலும் சரி, வயது முதிர்ந்தவரானாலும் சரி, நம்மவர்களில் ஒவ்வொருவரும் பரமாத்மாவின் (ஈசுவரனின்) கிரணம் எனச் சொல்லலாம். எப்படித் தேங்காய்க்குள் பருப்புள்ளதோ அம்மாதிரி சரீரத்துக்குள் அக்கிரணமிருக்கிறது. அந்தசூரியகிரணந்தான் யதார்த்தமான நாம். நம்முடைய சரீரம் நாமல்ல. நமக்கு வயதாக ஆக நம்முடைய சரீரம் நம்முடைய தகப்பனருடையதைப்போலாகிறது. சூரிய கிரணம்போன்ற நாமும் ஈசுவரனாகிய நம்முடைய பிதாவிடமிருந்து வந்தபடியால் அவரைப்போ லாகவேண்டும். நம்முடைய சரீரமானது தேகப்பயிற்சியினாலும் சுத்தஆகாரத்தாலும் நல்ல நித்திரையினாலும் வளர்கிறது. ஆனால் அந்த சூரியகிரணமானது எவ்விதம் வளரும்? அது நாம் நினைக்கிற நல்ல எண்ணங்களாலும் பேசுகிற நல்ல வார்த்தைகளாலும் செய்கிற நற்செய்கையாலும் வளரும். அவைகள் எல்லாம் பக்ஷமுள்ளவைகளாகவும் சாந்தமானவைகளாகவும் இருக்கவேண்டும்.

நம்முடைய சரீரம் நாம் ஏறிச்செல்லும் வாஹனம். உள்ளேயிருக்கும் சூரியகிரணத்தின் இஷ்டப்படி நம்முடைய சரீரம் கீழ்ப்படிந்து நடக்கப் பயிலவேண்டும்.

1. உதாரணமாக சில வேளைகளில் நாம் படுக்கையிலிருக்கையில் நம்முடைய தாயார் நம்மைப்பார்த்து "படுக்கையை விட்டு எழுந்திரு, நாழிகையாயிற்று" என்று சொல்லி அழைக்கிறாள். எழுந்திருக்க வேண்டியகாலம் வந்துவிட்டதாக நாமும் அறிகிறோம். அதாவது நமக்குள்ளிருக்கும் சூர்யகிரண மறிகிறது. ஆனால் நம்முடைய சரீரம் சொல்கிறதாவது—"இன்னம் சற்று நேரம் படுக்கையிலிரு" என்று சொல்கிறது. நம்முடைய தாயார் கூப்பிட்டவுடனே எழுந்திருக்கும்படியாக நம்முடைய சரீரத்தை நாம் செய்யவேண்டும். ஏனென்றால் அப்படிச் செய்வதுதான் சரி என்று சொல்லப்படுகிறது. நம்முடைய சரீரம் சோம்பலாக இருந்தாலும், அது சூரியகிரணத்தின் சிறிய வாகனமாதலால் கீழ்ப்படியவேண்டும்.

பரமாத்மாவின் சூரிய கிரணம் நம்முடைய சரீரத்தில் வசிப்பதால் அந்த சரீரமானது முற்றிலும் சுத்தமுள்ளதா யிருக்கவேண்டும். அதாவது நாம் குளிக்கவேண்டும். ஆனால் நம்முடைய தாயார் நம்முடைய விரல்களில் வளர்ந்திருக்கும் நகங்களைவெட்டி சுத்தி செய்கையிலும் நம்மைக் குளிப்பாட்டி கூந்தலைச் சீவுகையிலும் நாம் வீணாகஆக்ஷேபிக்கிறோம். நம்முள்ளிருக்கும் சூரிய கிரணமானது சுத்தமான வீட்டை வேண்டுகிறதென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

2. மேலும் நம்முடைய சரீரமானது அடிக்கடி பக்ஷமற்ற எண்ணங்களை எண்ணவும், கோபமான வார்த்தைகளைப் பேசவும் கெட்ட செய்கைகளைச் செய்யவும் விரும்புகிறது. அப்படி விரும்புவது யதார்த்தமான நாமாகிய சூர்ய கிரணமல்ல என்று அறியவேண்டும்.

3. ஒவ்வொரு காரியத்தையும் செவ்வையாகச் செய்யும்படியாகவும் நம்முடைய தாயார், ஆயாள் இவர்களுக்குக் கூடுமானவரை எப்பொழுதும் உதவி செய்யும்படியாகவும் ஒவ்வொருவரிடத்திலும் பக்ஷமாயிருக்கும்படியாகவும் நம்முடைய சரீரத்தைச் செய்யவேணும். நமக்கு வயதாய் நாம் பள்ளிக்கூடத்துக்குப்போக ஆரம்பிக்கும் பொழுது நம்மாலியன்ற மட்டும் நம்முடைய பாடங்களை நாம் படிக்க முயலவேண்டும். மற்றவர்களைப் பார்க்கிலும் நாம் அதிகமாய்த் தெரிந்துகொண்டிருப்பதாக உணர்வதற்கல்ல அப்படிப் படிப்பது. ஆனால் நம்மைச் சுற்றிலுமிருக்கும் குழந்தைகளான நம்முடைய சிறிய சகோதரர்களுக்கு எல்லாம் உதவி செய்யும்பொருட்டு நாம் அவ்விதம் பயிலவேண்டும். இவ்விதமாய் எது சரியானதோ அதை நம்முடைய சரீரம் செய்வது, இச்சிப்பது, நினைப்பதுமான மூன்று மார்க்கங்களின் மூலமாய் நம்முடைய சூரிய கிரணமானது வளரலாம்.

எல்லாரிலும் பெரிய, நம்முடைய மூத்த சகோதரரான அன்பாகிய பிரபு அவருடைய சூரிய கிரணம் எதை விரும்புகிறதோ அதைச் செய்யக் கற்றுக் கொண்டிருக்கிறார். நாம் அவரைப் பின்பற்றி நடப்போமானால் நம்முடைய சூரிய கிரணமும் விர்த்தியாய் அவருடையதைப் போல் சுத்தமானதும் பிரகாசமுமான ஒளியாக ஏற்படும். நம்முடைய சூரியக் கிரணமானது இன்னதைச் செய்ய விரும்புகிறதென்று நமக்குத் தெரியாத பட்சத்தில், நாம் அவரைப்பற்றி நினைக்கவேணும். அப்பொழுது இந்த மாதிரி சமயத்தில் அவர் என்ன செய்வாரென்று நாம் அறிவோம். இந்தக் கேள்விபை நாம் கேட்டபிற்பாடு, நாம் விரும்புகிறபடி அவர் நினைக்கமாட்டார், பேசமாட்டார், செய்யமாட்டாரென்று நாம் எப்போது உணருகிறோமோ அப்பொழுது அவ்விஷயம் நம்முடைய சரீரத்தால் விரும்ப

ப்பட்டதென்றும், நம்முடைய சூர்ய கிரணமான. நம்மு டைய எதார்த்தமான ஆத்மாவால் விரும்பப்படவில்லையென் றும் அறிகிறோம்.

"சிறிய நட்சத்திர தூதர்களாகிய உங்களுக்கு நான் அடுத்தமுறை எழுதும்பொழுது—சூர்யக்கிரணம் வளர்வ தற்கு எவ்விதம் உதவிசெய்யக் கூடுமென்பதற்குள்ள இதர வழிகளையும் முயற்சித்துக் கண்டுபிடிப்போம். இதற்கு மததியகாலத்தில நம்முடைய சிறிய சிநேகிதர்களும் சூரிய கிரணங்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்கள் சுயநலத்தைப் பாராட்டுகையிலும் நம்மிடத்தில் பக்ஷ மற்றவிதமாய் நடக்கையிலும் அவர்களிடத்தில் நாம் சூரிய கிரணத்தைப் பார்க்க முடியாது. மற்றவர்களிடமுள்ள சூரியக் கிரணத்தை நாம் பார்க்க வழியுண்டு.—அதாவது பக்ஷமாய் நினைப்பதினாலும், மிருதுவாய்ப் பேசுவதினாலும், உண்மையாயும் சுயநலமற்றும் நடப்பதினாலும் காணலாம். அப்பொழுது அவர்கள் சூரிய கிரணத்தை நம்மிடம் பார்ப்பார்கள். நாம் அதை அவர்களிடம் பாரப்போம். நாம் ஒவ்வொருவருக்கும் அன்பும் முகமலர்ச்சியுமுள்ள சிறிய சினேகிதர்களாக இருப்போம். அன்பு நிறைந்த பிரபுவான நம்முடைய மூத்தசகோதரர் வருகைக்கு ஆயத் தப்பட்டு வருவோம். நம்முடைய சரீரத்தை சூரிய கிர ணத்துக்குக் கீழ்ப்படும்படியாக செய்வதற்கு வேண்டிய முயற்சிகள எடுத்து முடிப்போமானல் அப்பொழுது நமக் குக் கிடைக்கும் லாபமென்ன? நம்முடைய தாயார் நமக்கு ஏதாவது வெகுமதி கொடுத்தால் அதை நாம் எவ்விதம் ரக்ஷிக்கிறோமென்பது எனக்குத்தெரியும். நாம் மேல்கண்ட படி நடந்தால் நாம் இதுவரை யடைந்த வெகுமதியைக் காட்டிலும் அதிகமான வெகுமதியை அடைவோம். ஆகை யால் பிரியமுள்ள சிறிய "நக்ஷத்திர தூதர்களே" மிகவும் ஜாக்கிரதையுடன் கேளுங்கள். நான் உங்களுக்குச் சொல் கிறேன்.

"அவர் திருக்கைஸ்பர்சம் படும்பொருட்டு சிறுபிள்ளை களை அவரிடத்துக்கு அவர்கள் கொண்டுவந்தார்கள். அவர் அக்குழந்தைகளை தன கரங்களில் எடுத்துத் தன் கைகளை அவர்கள்பேரில் வைத்து ஆசீர்வதித்தனர்".

ஆத்மபோதம்.

(400-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னொரு காலத்தில், புருச் சக்கிரவர்த்தியின் வம்சத்தில் உத்பவித்த ரந்திதேவர் என்ற ஓர் அரசனிருந்தார். இவர் சங்கிருதி யென்ற அரசனின் புத்திரர். இவர் பரத சக்கிரவர்த்தியிலிருந்து 6-ஆவதாக அரசாண்டு வந்தவர். இவர் இளம்பிராயம் முதற்கொண்டே, பெரியோர்களிடத்து மிக்க அன்பு பாராட்டி வந்ததுடன், சுசி, ருசி, ஆசாரம், நியமம் என்ற நான்கையும், நன்ருய்க் கைப்பிடித்து, முறையாய் நடந்து வந்தவர். தந்தை, தாய், உற்ருர், உறவினர், உடன்பிறந்தார், வீடு, சம்பத்து முதலியயாவும் அழியக் கூடியவைகளென்றும், பால்யம், யெளவனம், வார்த்திகம் என்ற மூன்று (சரீரத்தின்) நிலைமைகளும், துக்கஹேதுகமென்றும், உலக வாழ்கைக்கு இடமாகிய, ஸம்ஸாரம், என்பது, மனோ வாக்குக்கு எட்டாத் துன்பஹேது வென்றும், இவைகள் எல்லாவற்றிற்கும், ஆசையே உள்ளப்படி முக்கிய காரணமென்றும், இந்த ஆசையே, முடிவு பெருதிருக்குங்கால், மறு ஜநநத்திற்குக் காரணமாகிறதென்றும், இதே ஆசையானது, காமம், குரோதம் லோபம் என்ற மூன்று தீயகுணங்களையும் உண்டுபண்ணி, முடிவில் ஞானத்தையும் அடையாமற்செயவிக்கவும் சக்திவாய்ந்ததென்றும், நன்கே தெரிந்து கொண்டவர். இதே தாத்பரியத்தையே ஞானவெட்டி என்ற ஓர் மஹான் பின் நான்கு சுலோகங்களால் நன்கு விவரித்திருக்கிருர்.

𑌮𑌾𑌤𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 𑌸𑌹𑍋𑌦𑌰𑌃
𑌅𑌰𑍍𑌥𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌗𑍃𑌹𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤॥
𑌜𑌨𑍍𑌮𑌦𑍁𑌃𑌖𑌂 𑌜𑌰𑌾𑌦𑍁𑌃𑌖𑌂 𑌜𑌾𑌯𑌾𑌦𑍁𑌃𑌖𑌂 𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃
𑌸𑌂𑌸𑌾𑌰 𑌸𑌾𑌗𑌰𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤॥
𑌆𑌶𑌯𑌾 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑌹𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾।
𑌆𑌯𑍁𑌃𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌨𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤॥
𑌕𑌾𑌮𑌃𑌕𑍍𑌰𑍋𑌧𑌶𑍍𑌚 𑌲𑍋𑌭𑌶𑍍𑌚 𑌦𑍇𑌹𑍇𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌕𑌰𑌾𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑌤𑍍𑌨𑌾𑌪𑌹𑌾𑌰𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤॥

---

* உத்பவித்த = உண்டான

துக்கஹேதுகம் = துக்கத்தை உண்டு பண்ணுதல்.

இ—ள். "தாய் தகப்பன், பந்து உடன் பிறந்தார் என்பது எல்லாம் மித்தை. பொருள், வீடு, என்பதும் பொய். ஆகையால் விழித்துக்கொள்.

பிறத்தல், கிழட்டுத்தனம், ஸ்திரீ முதலிய சம்சார சாகரம் முற்றிலும் துக்கம். ஆகையால் விழித்துக்கொள்.

ஆயுள் குறைகிறதை அறியாமல் ஆசையாலும் கர்மத்தாலும் கவலையாலும் பந்தமடைகிருன். ஆகையால் விழித்துக்கொள்.

ஞானத்தை திருடுவதற்காக காமம், குரோதம், ஆசையென்ற திருடர்கள் காத்திருக்கிருர்கள். ஆகையால் விழித்துக்கொள்"

தத்வராயன்:—ஹே! குருநாதா. இந்த ஞானவெட்டி என்ற மஹான் யார்! அவருடைய வரலாற்றை சற்று விவரமாகக் கேட்க அவாக்கொண்டிருக்கும் எங்களை அநுக்கிரிக்கக் கோருகிறோம்.

யோகி:—ஆரம்பம் செய்த, மஹான் ரந்திதேவருடைய சரித்திரத்தை முடிய செப்பியபின் நீங்கள் அவாக்கொண்டிருக்கும் மஹான் ஞானவெட்டியின் சரித்திரத்தையும் புகல்வோம். ஆகவே கவனியுங்கள். இந்த ரந்திதேவர் என்ற மன்னர் மன்னன் தன் தேசம் தேடிவரும் பெரியோர்களுக்கும் அதிதிகளுக்கும் தகுந்தபடிஉபசரிக்க சுமார் 2 லட்சம் சமயற்காரர்களை நியமனம் செய்திருந்தார். இவர்தான் பிரதி தினமும் செய்யவேண்டிய அக்நி ஹோத்திரம் முதலிய இஷ்டிகளுக்கு வந்து விநியோகமான, பசுக்கள் கணக்கிலடங்காதவைகளே. அவைகளைப் பலி கொடுத்தவிடத்திற்கிடந்த சர்மங்களிலிருந்து பெருகிய ரத்தம் ஓர் ஆருக வோடியது. அவ்வாற்றுக்கு சர்மண்வதி யென்ற பெயருமுண்டு இந்நதிதான் தற்காலம சம்பல் என்ற பெயருடன் வழங்கி வருகிறது. தவிர இவருடைய இஷ்டிக்குப் பசுக்கள் சுவ

ர்க்க ஆசையினுல் தாமே வந்து சமர்ப்பணம் செய்துகொள்வது வழக்கம். தேவதைகள், முடிவில், நேரிலேயே ஹவிசையும் சிராத்தங்களின் முடிவில், பிதிருக்கள் நேரிலேயே, பிண்டங்களையும், பெற்றுக்கொள்வது வழக்கம். இவரைப்போல் நான்கு வருணத்தவர்களுக்கும் மிகுதியான தானதர்மம் செய்தவர் கிடையாதென்றே சொல்லலாம். ஓர் தினத்தில் சுமார் ஒரு கோடி தங்க நாணயங்களைப் பிராமணர்களுக்கு தானம் செய்தார். ஆயினும் தான் செய்த தானம் போதுமானதல்லவென்றும் அதனுல் ஒருவாறு நிவர்த்திக்க முடியாத நரக வேதனை யெங்கே ஏற்பட்டுவிடுமோ வென்றும் பலவிதமும் துக்கிக்கலானுர். தவிர இவர் மிக்க அருமையும் பெருமையுமான அநேக விரதங்களை எவ்விதத்திலும் தவருது நடத்தி வந்தார். இவர், விசுவாமித்திர மஹாரிஷியைப் பழிக்கத்தக்க வைராக்கியம் கொண்டு மஹாகடுமையான தபசும் செய்தவர். இவர் நூறு வருஷங்களுக்கு, பக்ஷந்தோறும், பிராமணர் ஒருவருக்கு சுவர்ணத்தினுற் செய்த ரிஷபம் ஒன்றும் நூறு கோக்களும் தக்ஷிணையாக எண்ணூறு தங்க நாணயங்களுமாக வரும் பிராமணர்களுக்கெல்லாம் தானம் செய்வதாக ஓர் விரதம் பூண்டு அவ்விதமே சொல்லொணுவாநந்தத்துடன் செய்து முடித்தார். இராஜாங்க முறைப்படியே இராஜரீகம் ஆறு மாதமும், காட்டில் பெரியோர்களுக்குப் பணிவிடை ஆறுமாதமும் மிகுந்த சிரத்தையுடன் செய்து வந்தார். இவர் செய்த பணிவிடையால் பெரியோர்கள் மிகவும் திருப்தியடைந்து இவரை பலவிதத்திலும் புகழ்ந்து, எக்காலத்து மழியாத பேராநந்தத்தை அடையுமாறு பகவானை துதிக்கலானுர்கள். இவர் இவ்விதமே பெரியோர்களாலும், தன் குடிகளாலும் புகழப்பட்டு, நியாயம் தவருது அரசாண்டு வந்தார். விஷ

யங்களிவ்வாறிருக்க, நாளடைவில் இவருக்கு ராஜ்யம் முதலிய யாவற்றிலும் வெறுப்புண்டாகி, தன்னரண்மனையிலுள்ள யாவற்றையும் வந்த பெரியோர்களுக்கும் அதிதிகளுக்கும் தானம் செய்தும் பிரதிதினமும் லட்சக்கணக்கான பேர்களுக்கு போஜநமும் அளித்து வந்தார். இவர் செய்த விஷயங்களுக்கெல்லாம் வேலைக்காரர்களிருந்த ஒற்றுமையும் அன்பும் மிகவும் வியக்கத்தக்கதே. இவருடைய ஐசுவரியத்தையும், அரண்மனையிலிருந்த தங்க மயமான சாமான்களையும் கண்ணுற்ற யாவரும் இவரை குபேரனினும் மேலோனென்றே புகழ்வது வழக்கம். இவர் மேற்சொல்லியவிதமே தன்னுடைய சகல சம்பத்தையும் ஸாது ஸமர்ப்பணம் செய்துவிட்டார். கடைசியாக ராஜ்யம் மட்டுமே எஞ்சியது. பிறகு தன் மந்திரிகள் நால்வரில் முதன் மந்திரியை அழைப்பித்து ராஜ்யாதிகாரத்தை யவரிடம் ஒப்புவித்து மற்ற மூவர்களையும் அவர் சொற்றவறாது நடக்கும்படிக்கும் தன் பத்னியை அழைப்பித்து சகல விஷயங்களையும் சவிஸ்தாரமாய்ச் சொல்லி தன் மைந்தர்களில் பெரியோனுக்கு இளவரசும் கட்டி இவ்விளங்குழவிகளை தன் வருதிப்படி பாதுகாப்பதே உத்தம ஸ்திரீகளின் லக்ஷணமென்றும் சுட்டிக்காட்டி அவ்வுத்தமியிடத்தும் மந்திரி முதலிய ராஜ தந்திரிகளிடத்தும் தனதிடத்துக்குன்றாவன்புடைய குடிகளிடத்தும் விடைபெற்று ஓர் சுபதினத்தில் பகவானை பூஜைசெய்து தவ வேடம் பூண்டு மாவுரி முதலியவை தரித்துக்கொண்டு பெரியோர்கள் வாஸம் செய்யும் கானகம் புகுந்தார். அந்தணர்கள் நீ போகும் வழியில் உனக்கு மங்களமுண்டாகுக என்றாசீர்வதித்தார்கள்.

அரசனும் கானகமடைந்து, அன்னபானாதிகள் யாவுமில்லாது, ஒரே மனத்தனாய் ஏழு தினங்கள் பகவத்தியானம் செய்ய, எட்டாவது தினமாகிய எவர்க்கும் சுலபமாய் கிட்டாத் தினத்தில், எம்பெருமானே, ஓர் யோகி வேடம் பூண்டு அவ்வரசனுக்கு வேண்டிய வரங்களைத் தந்தருளுவ

தாக திருவாய் மலர்ந்தருளினர். அரசனும் அவ்வரங்கள் யாதினும் பற்றில்லாதவனுய், தன்னைத் தமது சிஷ்யர்களில் ஒருவனுக ஏற்றுக்கொண்டு உத்தம உபதேசங்களைச் செய் விக்கும்படிக்கு மிகவும் வேண்டினன். பகவானும் அவ்வித மே சில உத்தம உபதேசங்களைச் செய்து போயினர்.

பிறகு அரசன் நாற்பது நாட்களுக்கு மிகவும் கோர மான தபசைச் செய்தான். இது சுவர்க்கம், பிரமலோகம், வைகுண்டம், கைலாயம், முதலிய உத்தமலோகம் வரை சென்று தாக்கிற்று. இந்திரன், முதலிய அவ்வுத்தமலோ கங்களிலுள்ள தேவர்கள் மிகுந்த வியப்பையும், சந்தோ ஷத்தையு மடைந்தனர். தவிர இம்மும்மூர்த்திகளும் தே வர்கோனும் ஒன்று கூடி பின் வருமாறு சம்பாஷிக்கலானர் கள்.

தேவேந்திரன்:—பாற்கடல் கடையப்படுங் கடு வெண் ணெய் திருமிடற்றடக்கிய ஹே பரமசிவமே! ஓர் விக்ஞாப னம்.

ருத்திரமூர்த்தி:—ஹே! தேவேந்திரா! யாது உன் வேண் டுதல். சுகமே தெரிவிக்கலாம்.

தேவே.—ஹே! பிரபோ! பூலோகத்தில் ரந்திதேவன் என்ற ஓர் உத்தமன் மானிடனுய்ப் பிறந்து சில காலம் ராஜ்யபாரம் வஹித்து உத்தமமான அநேகம் தான தர்மங் களை யெல்லாம் செய்து பிறகு சகல சம்பத்தையும் தன் முதன் மந்திரியிடம் ஒப்புவித்து கானகம் புகுந்து தவ வே டந்தரித்து, பகவான் ஸ்ரீயப்பதியாலே தீக்கை பெற்று மிக வும் கோரமான தபசு செய்து வருகிறுன். இனியும் அவன் கோரும் வரங்களை கொடுத்தருளா விட்டால், அவன் தவ அக்கினியினுல் எல்லா வுலகங்களு மெரிக்கப்பட்டுப் போ மென்றே நினைக்கிறேன்.

ருத்திரர்:-ஹே! தேவேந்திரா! நீ புகன்றயாவும் யானும் அறிந்த விஷயமே. அவன் சாதாரணமான பக்தனல்லன். அவன் மனத்தின் வல்லமையும், பெருமையும், பூவுலகத் தவர் யாவரும் அறியச் செய்து பிறகு அவனிஷ்டத்தை, மஹா விஷ்ணுவே பூர்த்தி செய்தருளுவார். ஆகவே அவனை நீங்கள் மூவரும் சோதிப்பது போற்காட்டி. அவன் பக்தி யின் பெருமையை வெளிப்படுத்த வேண்டும். ஆகவே இவ்விஷயத்தை சம்பூர்ணமாய் மஹா விஷ்ணுவிடம் தெரி விப்பாய்.

தேவேந்திரன் மகாவிஷ்ணுவிடம் போகிறார். ஹே! சகல லோக ரக்ஷகராகிய புராண புருஷா! புருஷோத்தமா! வந்தனம்.

விஷ்ணு:—ஹே! சுவர்க்காதிபா! யாது விஷயம்?

தேவே:—உலகடங்கலும் படைத்துடையவன் தலை பறித்திடக்கையி லடக்கிய இறைவனும் அடங்கலு மடக் கிடும் கடுங்கொலைக்காலனைக் காலெடுத்தடக்கிய கடவுளு மாகிய பரமசிவத்தின் ஆக்ஞையா லிவ்விடம் வந்தேன். சற்று செவி சாய்க்கக் கோருகிறேன்.

விஷ்ணு:—நல்லது புகல்வாய்.

தேவே—பூலோகத்தில் ரந்திதேவர் என்ற அரசன் செய்யும் கோர தபசை தாங்களறிவீர்கள். இனியும் அந் நர சிரேஷ்டனை அநுக்கிரகிக்கா திருத்தல் தகுமோ, முறை யோ, நியாயந்தானோ? பகவான் கைலாசாதிபதி தங்களுக் குச் சகலமும் தெரியுமென்றும், தங்களிடம் யாவற்றையும் சொல்லி தங்கள் ஆக்ஞைப்படி நடக்கும்படிக்கும் உத்திர வளித்தார். ஆகையால் தங்களுத்திரவை எதிர் பார்த் துக்கொண்டிருக்கிறேன்,

விஷ்ணு—நல்லது, எல்லாம் வல்ல பரமசிவத்தினுக் ஞைப்படியே நடத்தலாம். இப்பொழுது ரந்திதேவர் நிஷ்டை முடிந்து தன் மந்திரியால் கொண்டு வரப்பட்ட அந்நபானதிகளை, எல்லோருமாய்ப் புசிக்கப் போகிறார்கள். ஆகவே தற்சமயம் நீ, ஓர் பிராமணோத்தமனாக வடிவம் எடுத்துக்கொண்டு ரந்திதேவரை அடைந்து போசனங் கொடுக்கும்படி யாசிக்கவேண்டும். அதின் பிறகு பிரமன் அவ்விடம் வருவார், அறியவும்.

யோகி:—விஷ்ணு பகவானிவ்வித மாக்ஞை செய்ய தேவேந்திரனும் உடனே மானிட வடிவமெடுத்துக் கொண்டு ரந்திதேவரிருக்கும் கானகம் சென்று அவரைப் பின்வருமாறு கேட்கலானார்.

பிராமணன் தேவேந்திரன்—ஹே! அரசே நீர் இவ்விட மெழுந்தருளி யிருந்தும் நாங்கள் பசியால் துன்பமடைதல் நியாயமோ? ஈகையில் கர்ணனையும் பழித்த வள்ளலே! உடனே எங்கள் பசியாற்ற வகை சொல்வாய்.

ரந்திதேவர்—ஹே! பிராம்மணோத்தமா. இவ்விடம் நல்வரவே உமக்கு, இப்போசனத்தை தயவுடன் ஏற்றுக் கொள்வீர்.

யோகி:—தற்சமயம், அரசன் வந்திருந்த போசனத்தை எல்லோருடனும் சமமாகப் பாகித்துத் தனக்கு ஒரு பாகம் வைத்துக்கொண்டிருந்தான். பிறகு பிராமண வேடந்தரித்துக்கொண்டுவந்த தேவேந்திரனால் யாசிக்கப்பட்டபொழுது, தன் பாகத்தில் பாதியை அவருக்குக் கொடுத்தான்.

பிராம:—நல்லது என் பசி தீர்ந்துவிட்டது. யான் போய் வருகிறேன். நீ பகவதநுக்கிரகத்தால், என்று மழியாவானந்தத்தை யடைவாய்.

யோகி:—பிராம்மணோத்தமர் திருப்தியாய்ப் போகவே எஞ்சிய பாதி உணவை உட்கொள்ளப்போகும் சமயம், பகவான் ஸ்ரீயப்பதியால் ஆக்ஞாபிக்கப்பட்டு, பிரும்மதேவர் அப்பாதி உணவையும் தன் பசிக்காக யாசிக்கலானார்.

பிரும்ம தேவர்:—ஹே! புருகுலதிலகா! ரந்திதேவா யான் ஒரு அனாதிப் பிராமணன். தேசாடனம், தீர்த்தாடனம் செய்து வருபவன். தற்காலம் பசியால் மிகவும் வருந்துகிறேன். அதனை நிவர்த்திக்க வழி தேடுவாய். உனக்கு எல்லாம் வல்ல பெருமானின் அநுக்கிரகம் சீக்கிரமே கிடைக்கும்.

ரந்தி:—அய்யா, நீர் இவ்விடம் வரலாம் .உமக்கென்றே இவ்வுணவை வைத்திருக்கிறேன். இதோ ஏற்றுக்கொள்ளும். (தனக்குள்) ஹா! தெய்வமே. என்னை யிவ்விதம் சோதித்தல் தகுமோ? யான் ராஜ்யத்திருந்தபோது எத்தினம் செய்த விரதங்களை, அதிதிகள் வராமையால், எவ்வளவோ கஷ்டப்பட்டு முடித்தேன். அப்பொழுது அவ்விதம் சோதித்தீர். இப்பொழுதோ, நான் கானகத்தில் தவ வேடத்துடனிருக்க, என்னை அரசே என்று அழைத்து யாசகம் கேட்க செய்கிறீர். இதுவும் தர்மந்தானோ! நீர் அறியாததோ! ஆயினுமொன்று சொல்லுகிறேன். அதாவது என்னிடமிருக்கு மெதைக் கேட்டபோதிலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆகையால் தாம் இப்பொழுது எவர் என்னிடம் எதைக்கேட்டாலும் அதென்னிடமிருக்குமாறு அநுக்கிரகிக்க வேண்டும் பிரபோ.

பிரும்ம தேவர்:—நல்லதப்பா ரந்திதேவா. யான் பரம திருப்தியடைந்தேன். நீ எடுத்துக்கொண்ட விஷயம் சீக்கிரமே கைகூட, பகவான் அநுக்கிரஹிப்பார்.

யோகி:—பிரும்ம தேவர் இவ்விதம் ஆசீர்வதித்துச் செல்லவே, மஹா விஷ்ணு ஓர் சண்டாள ரூபம் எடுத்துக்

கொண்டு நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கிக் கொண்டு ரந்தி தேவரிடம் வந்து அவரிடம் தற்காலம் மிகுந்திருந்த தீர்த்தத்தையும் தனக்கும் நாய்களுக்குமாக யாசிக்க ரந்திதேவர் அடங்காச்சந்தோஷமடைந்து அத்தீர்த்தத்தை உடனே கொடுத்து தன்னை மறந்து பரவசமானன்.

மஹாவிஷ்ணு:—ஹே! பிரபோ யானும் என் நாய்களும் வேட்டையாடி வந்த சிரமத்தால் அடக்கமுடியாத தாகத்தால் தபிக்கிறோம். தண்ணீர் தந்தருளவேண்டும் பிரபோ.

ரந்தி:—அப்பா வேடா! இதோ தீர்த்தம். நீயும் உன்நாய்களும் சுகமே பருகலாம். சீக்கிரமே செய்வாயப்பா (தனக்குள்) இதுவும் அவன் அருளே.

மஹாவிஷ்ணு:—ஐயா! மஹாராஜாவே தங்களைப் போல் ஒருவரையும் நான் கண்டதில்லை. நான் போய் வருகிறேன். சுகமாயிருப்பீரையா.

(இன்னும் வரும்)

யோகி சுந்தரராஜம்.

நன்மொழி

மனிதன் சுபாவத்தில் கபடமுள்ளவன். அதனுல், அநேகரை மயக்குவான். மோசஞ்செய்வான் தன் லாபத்தையே கருதி வஞ்சிப்பான்.

ஈசன் அருட்பிரசாதம் பெற்றவனே கபடமின்றி நடப்பான். தீமை கொஞ்சமேனும் தோன்றினுலும், அதை விட்டகல்வான். மோசஞ் செய்யான். எல்லாவற்றையும் ஈசுவரார்ப்பணமாகவும் நன்மையாகவும் செய்வான். கடைசியாக அவரையே நம்பி, அவரிடமே அடைக்கலம் புகுவான்.

—கிறிஸ்துவின் ஒழுக்க முறைநூல்.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம் இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனேயொன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப் பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால். அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ அ பை
விலை பாக்கெட் 1-க்கு ரூ	0—8—0
டசன் 1-க்கு ரூ	5—0—0

விலாசம்:—வீ. ஏ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-வருஷம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஒளஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும.

சஞ்சீவி

பாலமித்ர.

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

இந்த

ஒளஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

[illegible]தன்மையான

மருந்து சென்ற 35-வருஷ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் 32. மாத்திரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜீ

ஆதங்கநிக்ரஹ ஒளஷதாலயம் 77. மேலகோபுரம் மதுரை.

இருமல், கபம். காசம் இவைகளுக்குச்சிறந்தமருந்து.

காசாந்தக

மாத்திரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள்விலாசத்தை எழுதுங்கள்

எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.